பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 09 சனிக்கிழமை (26-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:333

# அரசுத் தரப்புக்கு உதவியாகப் பேச்சுக்களில் மேஜர் ஜெனரல் உட்பட 3 ஆலோசகர்கள்

## இரண்டாவது சுற்றில் பங்குபற்றுவர் எனத்தகவல்

கொழும்பு,ஒக்.26

அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களின் முதல் சுற்றில் அரசுத் தரப்பில் பங்குபற்றிய அதே பிரதிநிதிகளே இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களிலும் பங்குபற்றுவர்.

எனினும், மேலதிகமாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட உட்பட மூவர் அரசுத் தரப்புப் பிரதிநிதிகளுக்கு உதவி வழங்கும் ஆலோசகர்களாக இம்முறை பேச்சுக்களில் பங்குபற்றுவர்.

இந்த விவரங்களை அமைச்சரவை பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

ஒக்ரோபர் 31ஆம் திகதிமுதல் நவம்பர் மூன்றாம் திகதிவரை இரண்டாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன. தாய்லாந்துத் தலைநகர் பாங்கொக்கிலிருந்து 40 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நொக்கம்பத்தொம் நகரத்தில் அவை நடைபெறும் எனவும் தெரிவித்த அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

அரசதரப்பு ஆலோசகர்களாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, சமாதானச் செயலகப் பிரதி நிதிகள் ஜோன் குணரத்ன, சானக ஜயசேகர ஆகியோர் கலந்துகொள்வர்.

இரண்டாவது கட்டப் பேச்சுக்களின போது 3 முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப்படும். அவற்றுள் கூட்டுச் செயலணி அமைப்பது மிக முக்கியமானது. அண்மையில் இலங்கை வந்திருந்த நோர்வே தூதுக்குழுவினர் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோருடன் இது பற்றி விரிவாக ஆலோ

(14ஆம் பக்கம் பார்க்க)

## சமரில் சந்தித்த தளபதிகள் பேச்சு மேசையில் ஒன்றாக

கொழும்பு,ஒக்.26

ஏ-9 கண்டி வீதியைக் கைப்பற்ற அரசுப் படைகள் நடத்திய நீண்ட சமரின்போது அந்தச் சண்டையில் எதிரெதிர்த் தரப்புகளில் முக்கிய பங்காற்றிய இரு தளபதிகள் தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களின் போது ஒரே மேசையில் சந்திக்கின்றனர்.

அடுத்த சுற்றுப் பேச்சில் விடுதலைப் புலிகள் தரப்பில் இடம்பெறவுள்ள கேணல் கருணா, அரசுதரப்புக் குழுவில் இடம்பெறவுள்ள மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட ஆகிய இரு தளபதிகளுமே (14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் சந்திரசேகரன் சந்திப்பு

கொழும்பு,ஒக்.26

அமைச்சர் சந்திரசேகரன் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து உரையாடினார்.

சமாதானப் பேச்சுகளில் மலையகத் தமிழ் மக்களது பிரச்சினைகளையும் கவனத்தில் எடுக்குமாறு இச் சந்திப்பில் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் சந்திரசேகரன் கோரிக்கை விடுத்தார்.

எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பமாகும் இரண்டாம் சுற்றுப் பேச்சுகளில் அரசமைப்பு விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா எனவும், பின்னர் நடைபெறும் பேச்சுகளில் இந்த விடயம் கவனத்தில் எடுக்கப்படும் எனவும் சு.ப.தமிழ்ச்செல்வன் பதிலளித்ததாக தெரிவிக்கப்பட்டது.

மலையகத் தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பாக அரசும், புலிகளும் சமாதானப் பேச்சுகளின் போது கவனம் செலுத்த வேண்டுமென அமைச்சர் சந்திரசேகரன் வற்புறுத்தினார். (ஐ)

# ஜனாதிபதியின் அழைப்பு உதாசீனம் அரசு தன்வழி செல்லத் தீர்மானம்!

## மக்கள் அளித்த ஆணையை நிறைவேற்றுவோம் என அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உறுதி

கொழும்பு,ஒக்ரோபர்26

**கடந்த வியாழன் மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டு மக்களுக்கு உரைநிகழ்த்தினார். அப்போது மூன்று முக்கிய விடயங்களை முன்வைத்து அவை தொடர்பான தன்போக்குக்கு ஆதரவளித்து, தன்னுடன் இணைந்து செயற்பட முன்வருமாறு சகல தரப்பினருக்கும் அவர் அழைப்பு விடுத்தார். ஆனால், அந்த அழைப்பை ஐக்கிய தேசிய முன்னணி அரசு மறுநாளே நிராகரித்துவிட்டது. தன்வழி - தனிவழி - செல்ல அரசு தீர்மானித்துள்ளது.**

"சமாதானம், பொருளாதாரம், ஆட்சி முறை ஆகியவை தொடர்பான எமது கொள்கைக்கு முழு அங்கீகாரம் அளிக்கும் தெளிவான தீர்ப்பை கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். அந்த ஆணையை நாம் நிறைவேற்றுவோம்!" - என்று அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதியின் அழைப்புக் குறித்து கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்

(13 ஆம் பக்கம் பார்க்க)

## 15 நாள்கள் ஆழ்கடலில் தத்தளித்த 6 தமிழக மீனவர்கள் மீட்கப்பட்டனர்

### திருமலை மீனவர்கள் காப்பாற்றினர்

திருகோணமலை,ஒக்.26

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த 15 தினங்களாகத் தத்தளித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் அறுவரை திருகோணமலை மீனவர்கள் நேற்றுமுன்தினம் காப்பாற்றிக கரை சேர்த்திருக்கிறார்கள்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

தமிழ் நாடு, கடலூரைச் சேர்ந்த மீனவர் அறுவர் கடந்த ஆறாம் திகதி ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கென இயந்திரப்படகில் புறப்பட்டுள்ளனர். 6ஆம் திகதிமுதல் 8ஆம் திகதிவரை மீன்பிடித்துள்ளனர். 9ஆம் திகதி படகு இந்திரம் பழுதடைந்துள்ளது. இதனால 24ஆம் திகதிவரை நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை அன்று முற்பகல் 11.30மணி அளவில் திருகோணமலை மீனவர்கள் முல்லைதீவு கடற்பரப்பில் கண்டனர். அவர்களை காப்பாற்றி ஆகாரம் கொடுத்து உபசரித்து திருகோணமலைக் கடற்கரைக்கு நேற்று அழைத்து வந்தனர். மீனவர்கள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதோடு பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மருத்துவ சோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

தமிழக மீனவர்கள் அறுவரும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வரவு - செலவுத்திட்ட வாக்கெடுப்பில் அரசின் பலத்தை தெரிந்து கொள்ளலாம்

### தேர்தலுக்கான அவசியம் இப்போதில்லை என்கிறார் பீரிஸ்

கொழும்பு,ஒக்.26

வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும் போது அரசுக்கு நாடாளுமன்றத்தில் உள்ள பலத்தைப் பற்றி எல்லோரும் தெரிந்து கொள்வார்கள் என்று அமைச்சரவை பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

19 ஆவது அரசமைப்புத் திருத்தம் மீதான உயர்நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை ஆகியன தொடர்பாகப் பல கேள்விகளைப் பத்திரிகையாளர்கள் எழுப்பினர்.

*கேள்வி:* 19ஆவது அரசமைப்புத் திருத்த விடயம் எதிர்க்கட்சிக்குக் கிடைத்த வெற்றி என்று வர்ணிக்கப் படுகிறதே?

*பதில்:* அது எவருடைய வெற்றியும் அல்ல; தோல்வியுமல்ல. அதே வேளை, உயர்நீதிமன்றத் தீர்மானத்தை நான் விமர்சிக்க விரும்பவில்லை.

*கேள்வி:* இந்தத் திருத்தச் சட்டம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

*பதில்:* அதில் பல வழிகள் இன்னமும் திறந்தே உள்ளன. குறிப்பாக நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கமுடியாத காலவரையறையை மூன்று ஆண்டுகளுக்கு நீடித்தல் மற்றும் மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் முறையை அனைத்து சட்டமூலங்களுக்கும் ஏற்புடையதாக்குதல் என்பவற்றைக் குறிப்பிடலாம். நாம் எந்த ஒரு பாதையையும் மூடிவிடவில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தரம் குறைந்த அரிசி விவகாரம்: அமைச்சர் தரப்பில் விளக்கம்

'நிவாரணத்திற்கு வந்த அரிசி தரங் குறைவு' என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான செய்தி தொடர்பாக புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிகச் செயலாளர் விளக்கக்குறிப்பு ஒன்றை அனுப்பிவைத்திருக்கின்றார். அமைச்சினால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படும் சகல பொருள்களையும் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அது தொடர்பான கேள்விப் பத்திர முறைகள் அனைத்தும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிரந்தர கேள்விப்பத்திர சபையின் அங்கீகாரத்திற்கும் நடைமுறைக்கும் அமையவே மேற்கொள்ளப் படுவதாகக் குறிப்பிட்டு, அது பற்றிய முழு விவரங்களும் அந்த விளக்கக் குறிப்பில் விளாவாரியாகத் தெரிவிக் கப்பட்டிருந்தது.

கடைசியாக யாழ்.அரச அதிபருக்கு அனுப்பப்பட்ட மூவாயிரம் மெற்றிக் தொன் அரிசி கூட, கூட்டுறவுச் சம்மேளனத்திடமிருந்து நிரந்தர கேள்விப்பத்திரச் சபையின் அங்கீகாரத்துடனேயே பெறப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்தில் இந்த அரிசியை ஏற்றும் இடத்தில்

(14ஆம் பக்கம் பார்க்க)

பெற்றோர்களே!

Sow the Seeds of Love

மறந்து விடாதீர்கள்!

இன்று உங்கள் பிள்ளைகளுக்கு

போலியோ தடுப்பு மருந்து வழங்குங்கள்!!

மறந்துவிடாதீர்கள்!!

PolioPlus

Rotary International

- யாழ். றோட்டறிக் கழகம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



கிளிநொச்சி தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் நேற்று பிற்பகல் அடேல் பாலசிங்கத்தின் 'சுதந்திரவேட்கை' நூல் அறிமுக விழா இடம்பெற்றது. தர்மபுரம் மகாவித்தியாலய அதிபர் மங்கள விளக்கேற்றுவதையும், கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகத்திடம் கேணல் ஜெயம் முதலாவது பிரதியை வழங்குவதையும், விடுதலைப் புலிகளின் பிரமுகர் ரமேஸ் அப்பா உரையாற்றுவதையும் விழாவில் கலந்துகொண்ட ரமேஸ் அப்பா, கேணல் ஜெயம், தூயவன், அரசறிவியல் கல்லூரி பொறுப்பாளர் அரசண்ணா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:தேவராஜன்)

# நீண்ட விடுதலைப் போராட்டத்தின் அரிய ஆவணம் 'சுதந்திரவேட்கை'

## கிளிநொச்சியில் நடந்த விழாவில் அரச அதிபர்

கிளிநொச்சி,ஒக்.26

தமிழ்மக்களின் வரலாற்றைத் திரிவு படுத்தித் தகவல்கள் வெளியிடப்படும் இந்த நேரத்தில், தமிழ் மக்களின் நீண்ட விடுதலைப் போர் குறித்த ஆவணமாக - வரலாற்றுப் பதிவாக - 'சுதந்திரவேட்கை' நூல் வெளிவந்துள்ளது.

- இப்படிக் கூறினார் கிளிநொச்சி அரச அதிபர் எஸ்.இராஜநாயகம்.

அடேல் பாலசிங்கம் எழுதிய 'சுதந்திர வேட்கை நூல்' அறிமுக விழா நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் தர்மபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சமயம் அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுச் சுடரேற்றலை அடுத்து மாலதி படையணித் தளபதி தமிழ்ச்செல்வி தேசியக்கொடி ஏற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

வெகுஜன ஒன்றியத் தலைவர் எஸ்.தங்கராசா தலைமையில் நடைபெற்ற விழாவில் அரச அதிபர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் போராட்ட நிகழ்வுகளை, மக்களின் துன்பதுயரங்களை, விடுதலைப் புலி உறுப்பினர்களின் உறுதியை எடுத்துக்காட்டும் நூல் 'சுதந்திர வேட்கை.'

தமிழ்மக்களின் வரலாறு திரிவுபடுத்தப்பட்டுவருகிறது. இதன்மூலம் இந்த நாட்டில் தமிழ் மக்களின் வரலாறு கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. தமிழ மக்களின் வரலாறு சிதைக்கப்பட்ட நிலையில், அந்த மக்களின் போராட்டத்தை, அவர்களின் விடுதலையை ஆவணப்படுத்தும் வரலாற்றுப்பதிவாக 'சுதந்திர வேட்கை' நூல் வெளிவந்துள்ளது - என்றார்.

விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட கொள்கை விளக்கப் பொறுப்பாளர் ரமேஸ் அப்பா பேசுகையில் கூறியதாவது:-

போராட்டத்துடன் தொடர்புடைய சம்பவங்களை நுட்பமாக - தெளிந்த தமிழில் - வடிதெடுத்துள்ள நூல் இது. போராட்டத்தின் வளர்ச்சி மக்களின் வேதனை, அவலங்கள் ஆகியவற்றை துல்லியமாக எடுத்துக் கூறும் நூல்.

தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் நடத்திய போராட்டம் இன்று உறுதியான ஒரு நிலைக்கு வந்துள்ளது. உலகத் தமிழரின் தலைவராக பிரபாகரனை இன்று ஏற்று அவரின் தலைமையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண இன்று முயற்சி எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

நூலின் முதற்பிரதியை விடுதலைப் புலிகளின் வடமுனைத் தளபதி கேணல் ஜெயத்திடம் இருந்து கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம் பெற்றுக்கொண்டார். (ஐ-3-8)

# மட்டக்களப்பில் கொலைவழக்கு எதிரி கழுத்து வெட்டிக் கொலை! சடலம் மீட்பு!

மட்டக்களப்பு,ஒக்.26

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இரவு மு.கந்தலிங்கம் (வயது 25) என்னும் இளைஞர் கழுத்துவெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இரவு 8.30மணியளவில் மட்டக்களப்பு புதிய பாலத்தடி கண்ணகி அம்மன் கோயிலடியில் இவரது சடலம் கைகள் கடடப்பட்ட நிலையில் பொலீஸாரினால் மீட்கப்பட்டது.

மகிளூரைச் சேர்ந்த இவர், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் இரவு நேரக் காவலாளியாக கடமையாற்றினார். தாண்டவன் வெளியிலுள்ள சில்லறைக் கடையொன்றில் பகுதிநேர வேலையும் செய்து வந்தார்.

சம்பவ தினத்தன்று இரவு 7.45 மணியளவில் கடையை விட்டு வெளியேறிய காந்தலிங்கம், 8.30 மணிக்கு சடலமாக மீட்கப்பட்டார்.

இவருக்கு எதிராக நீதிமன்றில் கொலை வழக்கு ஒன்று விசாரிக்கப்பட்டு வருகின்றது. தமிழ் அரசியல் குழு ஒன்றின் ஓர் உறுப்பினரின் தங்கையைக் கொலை செய்தார் என்று இந்த வழக்கில் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அக்குழுவினால அவருக்கு ஏற்கனவே பல தடவைகள் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன. (ஐ)

# ஓமந்தை சென்ற பஸ்ஸில் கொள்ளை: தப்பியோடிய இரண்டு பேர் சிக்கினர்

கொழும்பில் இருந்து ஓமந்தை வரை சென்ற பஸ்ஸில் பயணிகளிடம் கொள்ளையடிப்ப தில் ஈடுபட்ட இருவர் பின்னர் சிலாபம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை ஓமந்தைக்குப் பயணம் செய்து கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றில் பயணம் செய்த இருவர், பங்கதெனிய பகுதியில் வைத்து கத்திகளை உருவி பிரயாணிகளிடம் கொள்ளையடிக்க ஆரம்பித்துள்ளனர். பஸ்ஸில் பயணம் செய்த சிவில் உடையிலான பாதுகாப்பு படையினர் சிலர் இதனைக் கண்டுதடுக்க முற்பட்டனர். உடனே கொள்ளையர் இருவரும் ஒருவாறு பஸ்ஸில் இருந்து குதித்துத் தப்பி விட்டனர்.

இச் சம்பவம் குறித்து சிலாபம் பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து கொள்ளையர் இருவரையும் கைது செய்வதற்கான நவடிக்கையில் பொலீஸார் இறங்கினர்.

நேற்று அதிகாலை கொழும்பிலிருந்து வந்த பஸ் ஒன்றை தெதுருஓயா வீதிச் சோதனையின் போது மறித்துச் சோதனையிட்ட பொலீஸார் இரு கொள்ளையரையும் கைது செய்தனர். அவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளையும் பணத்தையும் பொலீஸார் கைப்பற்றினர். கைது செய்யப்பட்ட இருவரும் இரத்மலானைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர். சிலாபம் பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர். (ஐ)

# குழந்தைகளுக்கு இன்று போலியோ தடை மருந்து!

யாழ்ப்பாணம்,ஒக்.26

வடக்கு - கிழக்கில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இந்த ஆண்டுக்கான இரண்டாம் சுற்று போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கும் பணிகள் இன்று காலை 7 மணிமுதல் மாலை 4மணிவரை நடைபெறும்.

யாழ்குடாநாட்டில் இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதன்படி குடாநாட்டில் உள்ள 7 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த 190 நிலையங்களில் இன்று சொட்டு மருந்து வழங்கப்படும் என்று மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

'யுனிசெவ்'வின் போலியோ தடுப்புப் பிரிவு, சுகாதார அமைச்சு மற்றும் றோட்டறிக்கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த மாதம் 28ஆம் திகதியும் சொட்டு மருந்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10-15-17-30)

## மத்திய கல்லூரி மாணவர் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

மண்டைதீவு,ஒக்.26

தமது கற்றல் செயற்பாடுகளுக்குக் கணனி வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.மத்திய கல்லூரி உயர்வகுப்பு மாணவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடத்தி வந்த பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்றுடன் கைவிடப்பட்டது.

இந்தப் போராட்டம் குறித்து நேற்று பிற்பகல் 2.30 மணிமுதல் பெற்றோர்கள், மாணவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று கல்லூரியில் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அடுத்து பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-88-51)

# தவறணைகள் தீக்கிரையாக்கப்பட்டதால் சங்கத்துக்கு ரூபா 1 லட்சம் நஷ்டம்

வலி.கிழக்கு,ஒக்.26

வலி.கிழக்கில் கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான இரண்டுகள்ளுத் தவறணைகள் அண்மையில் விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டதால் சங்கத்துக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் கட்டைப்பிராய் புதிய செம்மணி வீதியில் உள்ள கள்ளுத்தவறணையும் இருபாலை கிழக்கில் உள்ள கள்ளுத்தவறணையும் தீக்கிரையாக்கப்பட்டன. இது தொடர்பாக கோப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-180)

# சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் பணி நாளை

யாழ்ப்பாணம்,ஒக்26

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தைச் சேர்ந்த வாகனப் பரிசோதகர்கள் நால்வர் இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

இதனையடுத்து நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மீண்டும் யாழ். மாவட்டத்தில் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இப்பணியில் ஈடுபடுவதற்கென 20 வாகனப் பரிசோதகர்கள் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் சுழற்சி முறையில் நால்வர் நால்வராக இங்கு வருகை தந்து தமது பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இன்று வரவுள்ள நால்வரும் இரண்டாவது குழுவினராவர். (ம-10)

# பள்ளிக்குடா வரை சென்று மீன்பிடிக்கும் மீனவர்கள்

அரியாலை,ஒக்.26

பாஷையூர் பகுதி மீனவர்கள் தற்போது பள்ளிக்குடா வரை சென்று தமது கடற்றொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதி மீனவர்கள் தமது வள்ளங்களுக்கு வெளி இணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்தி மன்னார் பள்ளிக்குடா வரை சென்று தொழிலில் ஈடுபடுகின்றனர்.

பள்ளிக்குடா பகுதியில் மீன் பிடிப்பதால் தமது வருமானத்தை பெருக்கிக் கொள்ள முடிவதாக மீனவர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-17)

## சமுர்த்தி வங்கியாளர் நியமனப் பரீட்சை

கொடிகாமம்,ஒக்.26

சமுர்த்தி வங்கியாளர் நியமனத்திற்கு விண்ணப்பித்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பரீட்சை நிலையம், பரீட்சைக்கான நேர அட்டவணை பற்றிய விவரங்கள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

விண்ணப்பித்தவர்கள் பிரதேச செயலகங்களில் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிவருபவர்களிடம் இருந்தும் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தமை தெரிந்ததே. (எ-74)

# ஐ.தே.கவில் சேருவதா? இல்லையா? தேர்தல் வரும்போது தீர்மானிப்பேன்!

## ரிச்சர்ட் பத்திரன எம்.பி. கூறுகிறார்

தேர்தல் ஒன்று வந்தால் ஐ.தே. கட்சியில் சேருவதா இல்லையா என்பதை அவ்வேளையில் தீர்மானிப்பேன் என்று காலி மாவட்ட பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினரான ரிச்சர்ட் பத்திரன தெரிவித்திருக்கிறார்.

பொ.ஐ.முன்னணியிலிருந்து வெளியேறுவதா, இல்லையா என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:

அக்மீமனத் தொகுதி அமைப்பாளர் பதவியை மீண்டும் வழங்கினாலும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். 19 ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தம் பற்றிய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்க்கட்சிக்குச் சாதகமாக அமைந்தபோது, நான் எனது முடிவை மாற்றிக்கொள்வேன் என்று பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த சிலர் கருதினர்.

ஆயினும் அமைப்பாளர் பதவியை இராஜினாமா செய்த எனது தீர்மானம் மீது அத்தீர்ப்பினால் நிர்ப்பந்தம் எதுவும் ஏற்படவில்லை.

அக்மீமனத் தொகுதிக்கு பொ.ஐ. முன்னணியால் வேறு ஓர் அமைப்பாளர் நியமிக்கப்பட்டால் அவரைத் தோற்கடிக்க நிச்சயம் நடவடிக்கை எடுப்பேன்.

- இவ்வாறு அவர் கூறினார்.

## 2003இல் பாடசாலை அனுமதி

# பிறப்புச்சான்றிதழ் பெற உடன் விண்ணப்பிக்குக!

## மேலதிகப் பதிவாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.26

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கவிரும்பும் பெற்றோர்கள் பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு இறுதி நேரம் வரையும் காத்திருக்காமல் உடனடியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் என்று மேலதிக மாவட்ட பதிவாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும்போது அவர்களின் பிறப்புச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படுவது மிகவும் அத்தியாவசியமானது. ஆனால், பெற்றோர்கள் பலர் பாடசாலை அனுமதிக்கான நாள் நெருங்கியதும் எமது அலுவலகத்துக்கு வந்து உடனடியாகப் பிறப்புச் சான்றிதழ்களை வழங்குமாறு கேட்கின்றனர். இதனால் நாம் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டி ஏற்படுகின்றது.

எனவே, பெற்றோர்கள் தற்பொழுது முதல் பிறப்புச் சான்றிதழுக்கு விண்ணப்பிப்பார்களானால் எவ்வித சிரமங்களுமின்றி அவர்கள் ஒரு கிழமைக்குள் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-10)



மொஸ்கோ கலையரங்கினுள் பணயக் கைதிகளை பிடித்து வைத்துள்ள செச்சினியத் தீவிரவாதிகள் தொடர்பாக ரஷ்ய தொலைக்காட்சி காண்பித்த சில காட்சிகளிலிருந்து எடுக்கப்பட்ட படத்தையும் கலையரங்குக்கு வெளியே ரஷ்யப் படையினர் டாங்கிகள் சகிதம் காவலில் ஈடுபட்டிருப்பதையும் தீவிரவாதிகள் கலையரங்கை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபோது அங்கிருந்து தப்ப முயன்ற சமயம் சுட்டுக்கொல்லப்பட்ட பெண் ஒருவரின் சடலத்தை அரங்கிலிருந்து வெளியே இழுத்துவரும் மருத்துவப் பணியாளர்களையும் படங்களில் காணலாம்.

### மொஸ்கோவில் செச்சினியத் தீவிரவாதிகளின்

# கடத்தல் நாடகம் தொடர்கிறது 8 சிறுவர்கள் நேற்று விடுவிப்பு!

மொஸ்கோ,ஒக்.26

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள கலையரங்க கடத்தல் நாடகம் தொடர்கிறது. செச்சினியத் தீவிரவாதிகளால் 700 பேர் வரையில் தொடர்ந்து பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டுள்ளனர். நேற்று வெள்ளிக்கிழமை அவர்களில் எட்டுச் சிறுவர்கள் தீவிரவாதிகளால் விடுவிக்கப்பட்டார்கள்.

6முதல் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களே நேற்று இறுதியாக விடுவிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் உடல் நலத்துடன் இருப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்று முன்னதாக மேலும் 7பேர் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

கலையரங்கினுள் சிக்கிக்கொண்டுள்ள வெளிநாட்டவர்களை மீட்பதற்கான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வியாழனன்று இந்த முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. வெளிநாட்டவர்களை விடுவிக்க முதலில் தீவிரவாதிகள் இணங்கினர். ஆனால், பின்னர் குறிப்பிட்ட நேரத்தில் தூதுக்குழுவினர் வராததன் காரணத்தால் வெளிநாட்டவர்களை விடுவிக்க தீவிரவாதிகள் மறுத்துவிட்டனர்.

ஆஸ்திரேலியா, பிரிட்டன், ஜேர்மன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 75பேர் கலையரங்கினுள் சிக்கிக்கொண்டனர். இவர்களை விடுவிப்பதற்கான தீவிர முயற்சிகள் நேற்றும் தொடர்ந்தன. நேற்றுப் பின்னதாக வெளிநாட்டவர்கள் விடுவிக்கப்பட இருந்ததாக வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

செச்சினியாவில் இருந்து ரஷ்யப் படைகள் முற்றாக வெளியேறவேண்டும் என்று கோரியே தீவிரவாதிகள் இந்தப் பணயக் கைதிகளைப் பிடித்து வைத்துக்கொண்டுள்ளனர். 40 பேர் வரையிலான தீவிரவாதிகள் கலையரங்கினுள் இருப்பதாக ரஷ்யத் தொலைக்காட்சி தெரிவித்தது. பணயக் கைதிகளை மீட்பதற்காக ரஷ்ய தூதுக்குழு தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்தி வருகிறது. ஆனால், ஏழு நாள்களுக்குள் செச்சினியாவில் இருந்து ரஷ்யப் படைகள் விலகாவிடில் பணயக் கைதிகள் அனைவரையும் கொன்றுவிடப்போவதாக தீவிரவாதிகள் தெரிவித்தனர்.

(ம)




## பிரிட்டிஷ் கல்வி அமைச்சர் பதவியை திடீர் இராஜினாமா

லண்டன்,ஒக்.26

பிரிட்டனில் கல்வித் துறையில் எழுந்த ஊழல் புகார் காரணமாக கல்வி அமைச்சரான எஸ்டேல்லா மோரீஸ் பதவி விலகினார்.

பிரிட்டனில் பாடசாலைப் பரீட்சையின் தரம் குறைந்ததாகவும் இதில் முறைகேடுகள் நடந்ததாகவும் அண்மைக்காலமாக புகார் எழுந்தன. இதைத் தொடர்ந்து இந்த ஆண்டு கல்வித் தேர்வுகளின் தரத்தை உயர்த்துவதாகவும், அப்படிச் செய்யாவிட்டால், பதவி விலகுவதாகவும் கல்வி அமைச்சர் உறுதியளித்திருந்தார்.

இந்த உறுதிமொழியை அவர் நிறைவேற்றாததால் கன்சர்வேடிவ் கட்சியினர் அவர் பதிவி விலகவேண்டும் என்று கோரினார்.

இதைத் தொடர்ந்து பதவி விலகுவது என்று மோரீஸ் முடிவெடுத்தார். பிரதமர் ரொனி பிளயரை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து தன் முடிவைக் கூறினார்.

அப்போது, அவர் முடிவை பரிசீலனை செய்யும்படி பிளயர் கேட்டுக் கொண்டார். ஆனால், தன் முடிவில் உறுதியாக இருந்த மோரீஸ் பிரதமருக்கு தன் முடிவை எழுத்துமூலம் தெரிவித்ததோடு, ராஜினாமாக் கடிதத்தையும் அனுப்பிவைத்தார்.

மோரீஸுக்கு அனுப்பிய பதிலில் ரொனி பிளயர் கூறுகையில், நீங்கள் பதவி விலகியது வருத்தம் அளிக்கிறது என்றபோதிலும், உங்கள் முடிவை நான் மதிக்கிறேன் என்று கூறிய அவர், மோரீஸ் அரசுக்கு அளித்த பங்களிப்பை பாராட்டினார்.

(ம)

## அணுஆயுதப் பொருள் கடத்தலா? ரஷ்ய விமானத்தில் சோதனை

நியூயோர்க்,ஒக்.26

ரஷியாவின் தலைநகர் மொஸ்கோவில் இருந்து 176 பயணிகளுடன் புறப்பட்ட விமானத்தில் அணு ஆயுதப் பொருள்கள் கடத்தப்படுவதாக சந்தேகம் ஏற்பட்டதையடுத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

இந்த விமானம் புறப்பட்டதும், ரஷ்ய அதிகாரிகள் அமெரிக்க அதிகாரிகளைத் தொடர்புகொண்டு விமானத்தில் ஒரு பயணி, அணு ஆயுதப் பொருள்களுடன் பயணம் செய்வதாக சந்தேகப்படுவதாகவும் அவரைச் சோதனையிட வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து நியூயோர்க் நகரில் விமானம் தரையிறங்கியதும் அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

பயணிகள் அனைவரையும் விமானத்தில் இருந்து இறங்கி தீவிர சோதனை நடத்தப்பட்டது. அதில் ஏதுவும் கிடைக்கவில்லை. சந்தேகத்துக்குரிய ஒருவரை மட்டும் பொலீஸார் காவலில் வைத்துள்ளனர். அவரிடம் விசாரணை தொடர்ந்து நடந்து வருகிறது.

(ம)

## அமெரிக்க ரயில்சேவை அல்கெய்டாவின் இலக்கு

### எவ்.பி.ஐ. எச்சரிக்கை

அமெரிக்காவின் ரயில்சேவை வலைப்பின்னலை இலக்காகக் கொண்டு அல்கெய்டா தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இது தொடர்பாக திட்டவட்டமான தகவல்கள் தனக்குக் கிடைத்துள்ளதாக அமெரிக்க சமஷ்டி புலனாய்வு அமைப்பான எவ்.பி.ஐ. தெரிவித்துள்ளது. இது நாட்டின் சட்டம் ஒழுங்கைக் காக்கும் அமைப்புக்களையும் இதுகுறித்து எவ்.பி.ஐ. எச்சரித்துள்ளது. முக்கிய ரயில் பாலங்கள், தண்டவாளங்கள் என்பனவும் மிக முக்கிய பொருள்களைக் கொண்டு செல்லும் ரயில் வண்டிகளுமே அவர்களின் இலக்கு என்று எவ்.பி.ஐ. கூறுகின்றது.

கைது செய்யப்பட்ட அல்கெய்டா தீவிரவாதிகளிடம் இருந்தே இந்தத் தகவல்களை எவ்.பி.ஐ. பெற்றுள்ளது. ரயில் பாதைகள், தொடர் ரயில்கள் போன்றவற்றின் படங்களை எவ்.பி.ஐ. அதிகாரிகள் இவர்களிடம் இருந்து கைப்பற்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

(ம)

### திங்களன்று நடந்த தற்கொலைத் தாக்குதலுக்கு

# பழிவாங்கும் நடவடிக்கையை இஸ்ரேல் படை ஆரம்பித்தது

ஜெருசலேம்,ஒக்.26

இஸ்ரேலில் கடந்த திங்கட்கிழமை பயணிகள் பஸ் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 15பேர் கொல்லப்பட்டு 40 பேர் காயமடைந்த சம்பவத்துக்குப் பழிவாங்கும் பதில் நடவடிக்கையை இஸ்ரேலியப் படைகள் ஆரம்பித்துள்ளன.

நேற்று வெள்ளிக்கிழமை டசின் கணக்கான டாங்கிகள் சகிதம் இஸ்ரேலியப் படைகள் மேற்குக்கரை நகரான ஜெனினுள் நுழைந்தன.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் நப்லஸ் நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் பின்னர், பலஸ்தீன அதிகாரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் நடத்தப்படும் பெரும் இராணுவ நடவடிக்கை இது என்று இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

ஜெனின் நகருக்குள் நுழைந்துள்ள இஸ்ரேலியப் படைகள் அங்குள்ள அகதி முகாம் உள்ளடங்கலாக ஒவ்வொரு வீடுகளினுள்ளும் புகுந்து தீவிர சோதனைகளை நடத்தி வருவதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

வழமையாக பழிவாங்கும் நடவடிக்கையை இஸ்ரேல் உடனேயே மேற்கொள்ளும் ஆனால், இம்முறை திங்கட்கிழமை தற்கொலைத் தாக்குதல் நடந்தபோதும் பதில் நடவடிக்கையை இஸ்ரேல் சற்று தாமதித்தது. ஈராக்குக்கு எதிராக ஐநா. பாதுகாப்பு சபையில் அமெரிக்கா பிரேரணை கொண்டுவந்தமையே இதற்குக்காரணம்.

ஜெனின் நகரில் இருந்து கடந்த மாதமே இஸ்ரேலியப் படைகள் வெளியேறி இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

## வாஷிங்ரன் மர்மக் கொலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி மீட்பு!

வாஷிங்ரன்,ஒக்.26

அமெரிக்காவின் வாஷிங்ரன் நகரில் மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்பிய குறிபார்த்துச் சுடும் நபர் பயன்படுத்தியதாகக் கருதப்படும் துப்பாக்கியைத் தாம் கைப்பற்றியுள்ளதாக பொலீஸார் அறிவித்துள்ளனர்.



கைதுசெய்யப்பட்ட ஜோன் அலன் மொஹமட் (வலது), ஜோன் லீ மல்வோ (இடது).

இந்தச் சம்பவம் தொடர்பாக ஜோன் அலன் மொஹமட் (வயது 42) மற்றும் அவரது வளர்ப்பு மகனான ஜோன் லீ மல்வோ (வயது 17) ஆகியோர் ஏற்கனவே பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். வீதியோர கார் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரில் தூங்கிக்கொண்டிருந்த சமயம் அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

ஜோன் அலன் மொஹமட் ஒரு முன்னாள் சிப்பாய். குறிபார்த்துச் சுடுவதில் வல்லவரான இவர், ஆயுதங்களுடன் தொடர்புடைய வன்முறைகளுக்காக ஏற்கனவே தண்டிக்கப்பட்டுள்ளார்.

வாஷிங்ரனிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் அண்மையில் 13 பேர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக இவர்மீது நேற்றுப் பொலீஸார் கிரிமினல் வழக்குப் பதிவுசெய்தனர். சுடப்பட்டவர்களில் 10 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

அவரது வாகனத்தில் இருந்து கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டப் பகுப்பாய்வுகளில் இருந்து கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி இதுதான் என உறுதிப்படுத்தப்பட்டதாகப் பொலீஸார் கூறுகின்றனர்.

அலன் மொஹமட்டுக்கு எதிரான உறுதியான சான்றாக இந்தத் துப்பாக்கி இருக்கும் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

(ம)

## கிராமவாசியை 'பொரித்த' உகண்டா தீவிரவாதிகள்

ஆபிரிக்காவில் உள்ள உகண்டா நாட்டில் கடந்த 15ஆண்டுகளாக யோவேனி முஸேவனி அதிபராக இருக்கிறார். அவரை ஆட்சியில் இருந்து விரட்ட ஜோசப்கோனி தலைமையில் பிரபுக்கள் எதிர்ப்புப்படை என்ற பெயரில் ஒரு புரட்சி இயக்கம் ஆயுதம் ஏந்தி போராட்டம் நடத்தி வருகிறது. இராணுவத்துக்கும் அவர்களுக்கும் அடிக்கடி ஏற்படும் மோதல்களில் ஆயிரக்கணக்கானவர்கள் பலியாகி வருகிறார்கள்.

வடக்கு உகண்டாவில் உள்ள பாடா மாவட்டத்தில் இந்த இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் சமீபத்தில் திடீர்தாக்குதல் நடத்தினார்கள்.

தங்களை ஆதரிக்காத அகோலி பழங்குடி மக்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய இந்தத் தாக்குதலில் 33 பேர் கொல்லப்பட்டார்கள். தீவிரவாதிகள் கிராமவாசி ஒருவரைப் பிடித்து கொதிக்கும் எண்ணைக் கொப்பறையில் போட்டு கொடூரமாக கொன்று இருக்கிறார்கள். பின்னர் இராணுவம் வருவதற்குள் அவர்கள் தப்பிவிட்டார்கள்.

(ஒ)

## விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ச.முருகனேசன் தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-10)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான 'வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்' செயலமர்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயப் பணிமனையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## தண்ணீர்த் தாங்கி அன்பளிப்பு

சாவகச்சேரி,ஒக்.26

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் நன்மை கருதி ஜி.ரி.இசற் நிறுவனம் ஆயிரம் லீற்றர் கொள்ளளவுள்ள தண்ணீர் தாங்கியை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இதன் மூலம் நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலையின் தண்ணீர் தேவையை ஒரளவு பூர்த்திசெய்ய வாய்ப்புக் கிட்டியுள்ளது. (ம-31)

## கச்சாய் பாடசாலையில் நூல்நிலையம்

கொடிகாமம்,ஒக்.26

கச்சாய் அ.த.க. பாடசாலையில் 12 லட்சம் ரூபா செலவில் நூல்நிலையம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் அண்மையில் நடப்பட்டது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா இந்த அடிக்கல்லை நட்டுவைத்தார்.

மேற்படி நிலையம் உலக வங்கியின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ளது. (எ-74)

## யாழ்.ஆஸ்பத்திரியில் லிப்ற் பொருத்தும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்.போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை விடுதி மற்றும் மகப்பேற்று விடுதி ஆகியவற்றுக்கு புதிய மின்தூக்கிகளை (லிப்ற்) பொருத்தும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென கொழும்பில் இருந்து வந்த மின்தூக்கி தொழில்நுட்பவியலாளர்கள் நால்வர் போதனா வைத்தியசாலையின் மின்தொழில்நுட்பவியலாளர்களுடன் இணைந்து இந்த 'லிப்ற்'களைப் பொருத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கான புதிய 'லிப்ற்'கள் கடந்த மாதம் சுகாதார அமைச்சினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (ம-4-15)

## தீபாவளியை முன்னிட்டு வர்த்தக நிலையங்களை திறக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.26

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இன்றும், நாளையும், அதே போல் எதிர்வரும் 2, 3, 4ஆம் திகதிகளிலும யாழ்.வர்த்தக ஸ்தாபனங்களைத் திறந்து வியாபாரம் செய்யுமாறு வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

மேற்படி தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்படவேண்டும் என்றும் யாழ். வணிகர் கழகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## யாழ்.ஆஸ்பத்திரியில் நோயாளர் எண்ணிக்கை திடீரென அதிகரிப்பு!

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த சில தினங்களாக வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் கட்டில் வசதியின்றி நோயாளிகள் பலர் வார்ட்டுகளின் நிலத்திலும், வெளி விறாந்தைகளிலும் பாய்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் -

இதன் காரணமாக நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவது தவிர்க்கமுடியாததாகிவிடுகின்றது என்றும் -

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-10-15)


**விற்பனைக்கு**

அதிகளவு வதிவிடங்கள் அமைந்துள்ள இடம் கொழும்பு - 15. கோட்டையிலிருந்து 10 நிமிட பயணம், 30 அடி அகலமுள்ள வீதி, இறுதியாக விற்பனைக்காக உள்ள சில கட்டடங்கள் 6.5 பேர்ச் - 4 கட்டடங்கள், 7.5 பேர்ச் - 3 கட்டடங்கள், 8.5 பேர்ச் - 2 கட்டடங்கள். பேர்ச் ஒன்றின் விலை 250,000/- வங்கிக்கடன்கள் ஒழுங்கு செய்துதரப்படும். மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

திரு.விஜேசிங்க
கட்டட விற்பனையாளர்
122, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02.
தொலைபேசி எண் - 304239, 071 - 730492
ஈமெயில்:- sascool@e-mnet.com
(C/24463)



**தீபாவளிப் பரிசுப் போட்டி**

**சுந்தர்சன்**

மத்திய சந்தை முன்பாக,
பிரதான வீதி, மானிப்பாய்.

உள்ளூரிலேயே மக்கள் சேவையை சிரமேற்கொண்டு கடந்த 22 ஆண்டு காலமாக

- மின்சார உபகரணங்கள்!
- P.V.C. நீர்க்குழாய்கள், இணைப்புகள்!
- அலங்காரப் பொருள்களை நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள:

**சுந்தர்சன்**
*மானிப்பாய்*

**தீபாவளி - 2002 பரிசுப் போட்டியின் விவரம்:-**

25.10.2002ஆம் திகதியிலிருந்து 06.11.2002ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் எமது ஸ்தாபனத்தில் அதிகூடிய தொகைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்யும்:-

- வீட்டு உரிமையாளர்கள் மூவருக்கும்
- மூன்று வர்த்தக பிரமுகர்களுக்கும்
- கட்டட ஒப்பந்தகாரர்கள் மூவருக்கும்
- மின் இணைப்பாளர்கள் அறுவருக்கும்

அதிசயிக்கத்தக்க பெறுமதிவாய்ந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.

*ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!!*

*மத்திய சந்தை முன்பாக,*
*பிரதான வீதி,*
*மானிப்பாய்.*
*Tele phone/Fax: 222 2751* (9928)

சுந்தர்சன்
உரிமையாளர்.



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



தாவடி வடக்கு, வன்னியசிங்கம் வீதியைச் சேர்ந்த

**செல்வி சுமதி தாமோதரம்பிள்ளை**

அவர்கள் 13.10.2002இல் நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக 22ஆவது பட்டமளிப்புவிழா வில் நுண்கலைமாணி (நடனம்) பட்டம் பெற்றமைக்காகப் பாராட்டுவதுடன் மேலும் பல சிறப்புகள் பெறவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

- அப்பா, அம்மா, சகோதரர்கள்
*(தாமோதரம்பிள்ளை குடும்பம்),*
அக்காமார், அத்தான்மார்,
அம்மப்பா, அம்மம்மா
*(தியாகராசா குடும்பம்),*
சித்தப்பா, சித்தி, சோபிகா
*(சபாநாதன் குடும்பம் - கஜன் மோட்டோர்ஸ்),* மைத்துனர்மார்,
மாமாமார், மாமிமார், உறவினர்கள்.
(9914)



யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

**பொதுக்கூட்டம்**

03-11-2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பழைய மாணவருக்கான பொதுக்கூட்டம் நடைபெறும். இந்தக் கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகமளித்துக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ உறுப்புரிமை பெறாத பழைய மாணவர்களும் அன்றைய கூட்டத்தில் கலந்து உறுப்புரிமையைப் பெறமுடியும்.

(9917) - செயலாளர்.



உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும்
**இலவச மருத்துவ முகாமும்**
**இலவச கண்ணாடி பரிசோதித்து வழங்கலும்**

*காலம்:-* 27.10.2002 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணிமுதல் 12.30 மணிவரை
*இடம்:-* ஆரம்ப சுகாதார நிலையம், ஈவினை
(கற்பக விநாயகர் ஆலயம் அருகில்)

*கண்பரிசோதனை:-* லயன் எஸ்.எம்.பெர்னாண்டோ MJF.
சிறந்த வைத்திய நிபுணர்களும், மருத்துவ மாணவர்களும் இப்பரிசோதனைகளை நடத்துவார்கள்.

*அனைவரும் வருக! பயன் பெறுக!!*

ச. ஏகாம்பரநாதன் லயன் அ.ஈஸ்வரநாதன்
தலைவர். (9916) செயலாளர்.



**31ஆம் நாள் நினைவில்**
**கண்ணீர் அஞ்சலி**

எமது நிறுவன தரம் 4 ஆசிரியை செல்வி அ.ரஜனி அவர்களின் அன்புத் தந்தையாரான

அமரர் கணபதிப்பிள்ளை அற்புதலிங்கம் (செல்வம்)

*(நிரந்தரமுகவரி: தாளையடி வீதி, மயிலிட்டி)*

அவர்களின் பூவுலகப் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்தித்துக்கொள்கின்றோம்.

ரலன்ற் இன்ஸ்ரிரியூட்
இயக்குநர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

*கரவெட்டி.* (9913)



**வெள்ளி விழா வாழ்த்துக்கள்**

கரம்பொனூர் பெற்றெடுத்த
வெள்ளிவிழா நாயகனாம்
அருட்பணியாளன் எம்.பொனிபாஸை
இன்பமாக வாழ்த்துகின்றோம்.

ஞானச் செருக்கோன் எம் புனிதர் செபஸ்தியாரின்
வழிநின்று பணிசெய்ய வேண்டுகின்றோம்
இறைவனிடம்.

இவர் பணிக்காய் நன்றிகூறும் திருப்பலியில் இணைந்திடவே
அழைக்கின்றோம்
அனைவரையும் எம் பங்கிற்கு
ஒக்ரோபர் 31 வியாழன் காலை 9.00இற்கு.

பங்குத் தந்தையும், பங்குமக்களும்
புனித செபஸ்தியார் ஆலயம்
*கரம்பொன்.*

(9922) அருட்திரு.அ.ஞானப்பிரகாசம்.





AMTRA PAVE®

அம்ட்ராட் சீமெந்துக் கட்டிப்படிகை உபயோகித்து, உங்கள் சேற்றுப்பாதை, ஒழுங்கற்ற ஓரப்பாதை, தூசி நிறை ஓடுபாதை அனைத்தையும் சீராகவும் சுத்தமாகவும் வைத்திருங்கள்.



UNI III PRIORY III DOUBLE II SPANISH III



120/1 ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடை.
தொலைபேசி: 853216, 820931, 074 - 408878 ; பக்ஸ்: 824645
மின்அஞ்சல்: amtrad@sltnet.lk

AMTRAD
இலங்கைக்கான
த புனொக் ரு பேவிங் கம்பனி

உதயன்

## சந்திரிகாவின் அழைப்பு

சமாதானத்துக்கும் பொருளாதாரச் சீரமைப்புக்கும் புதியதிட்டம் ஒன்றை உருவாக்கி அதை இணைந்து நடைமுறைப்படுத்த வாரீர் என்று அரசினர் உட்பட அனைவருக்கும் -

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் எனது முயற்சியில் இணைந்து செயற்படுவதற்கு முன்வாருங்கள் என்று குறிப்பாக அரசினருக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தேர்தல்முறை மறுசீரமைப்பும் இப்போது அத்தியாவசியமாகின்றது. நம்மை மேலும் ஜனநாயக மயப்படுத்தும் வகையில் அந்நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு, தேர்தல் முறை மறுசீரமைப்புடன் இணைந்தே மேற்கொள்ளப்படவேண்டும் - இப்படி ஜனாதிபதி தமது தீர்மானத்தைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

அறிவிப்புக்களை விடுப்பதிலும் வாக்குறுதிகளைத் தருவதிலும் கனவுகளைக் காண்பதிலும் ஜனாதிபதி குமாரதுங்க வல்லவர். ஆனால், அவற்றை உரிய காலத்தில் நிறைவேற்றுவதில் - நனவாக்குவதில் - ஏனோ மந்தப் போக்கை வெளிப்படுத்துவார். இது தான் நீண்டகாலமாக அவரோடு அரசியல் ரீதியாகப் பழகியோரின் அனுபவம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அரியதொரு வாய்ப்பைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்து 1994 இல் 'சமாதான தேவதையாக' காட்சியளித்த அவரிடம் மக்கள் ஒப்படைத்தனர். வாக்குறுதிகளையும், அறிவிப்புக்களையும் நிறைவேற்றத் தவறும் தமது அசமந்தப்போக்கினால்தான் அந்த வாய்ப்பை அவர் கோட்டைவிட்டார்; நாட்டைப் பேரழிவு யுத்தத்துக்குள் தள்ளக் காரணமானார்.

இப்போது புதிதாகத் திட்டங்களை உருவாக்கி இணைந்து நிறைவேற்ற வாருங்கள் என்று அழைப்பு விடுக்கிறார். அதை அரசு நிராகரித்துவிட்டது.

ஜனாதிபதி குமாரதுங்கவின் வாக்குறுதிகள் எவ்வளவு தூரம் நிறைவேற்றப்படும் என்பதில் தமிழ்த் தரப்புக்கு நல்ல அனுபவம் உண்டு.

என்றாலும் இம்முறை அவர் விடுத்திருக்கும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புப் பற்றிய அறிவிப்பு சற்று வித்தியாசமானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கத் தயார் என்று ஏற்கனவே பல தடவைகள் அறிவிப்புக்களை அவர் விடுத்து வந்தார் என்பது உண்மைதான்.

ஏன் அந்த முறையை ஒழிப்பேன் என்ற முதன்மை வாக்குறுதியை மக்களுக்குக் கூறித்தான் அவர் 1994 இல் ஆட்சியைக் கைப்பற்றினார். பின்னர் அந்த முறையை ஒழிப்பதற்கான காலக்கெடுவைக் கூட அவர் பிரகடனப்படுத்தினார்.

அதனால் வழமைபோல் அவரது வாக்குறுதிகளும் பிரகடனங்களும் காற்றோடு காற்றாகப் போய்விட்டன; நிறைவேற்றப்படவில்லை.

என்றாலும் இப்போது அவரது அறிவிப்பில் சிறிய மாற்றப் போக்குத் தெரிகின்றது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு அடங்கியதான அரசமைப்பு மாற்றம் ஒன்று கொண்டுவரப்படவேண்டும். அந்தத் தீர்வு அடங்கிய அரசமைப்பு மாற்றம் வரும்போது அதில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதையும் சேர்த்துக்கொள்ளலாம் என்றுதான் அண்மைக்காலத்தில் ஜனாதிபதி குமாரதுங்க கூறிவந்தார்.

ஆனால், இப்போது தீர்வுத் திட்ட ஏற்பாடுகளை விடுத்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் விடயத்தைத் தனியாகச் செய்வதற்கு அவர் முன்வந்திருக்கின்றார்.

அதற்கு அவர் ஆக ஒரேயொரு நிபந்தனைதான் விதித்திருக்கின்றார். அது அந்த மாற்றத்தோடு தேர்தல் மறுசீரமைப்பு ஏற்பாடுகளையும் இணைத்துச் செய்யவேண்டும் என்பதுதான்.

தேர்தல் மறுசீரமைப்பை சிறுபான்மைச் சமூகங்கள் - குறிப்பாக முஸ்லிம்கள் - எதிர்க்கக்கூடும்.

எனினும், நாட்டின் ஆட்சி முறையை உரிய வகையில் ஜனநாயக மயப்படுத்துவதற்கு நிறைவேற்று அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிந்திருப்பது இடைஞ்சலாக இருக்கின்றது என்ற யதார்த்தத்தை அனைவரும் உணரவேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்தை வைத்திருப்பவரே அந்த முறையை ஒழிப்பதற்கு முன்வரும் இந்தச் சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

'மிக விரைவில் - எதிர்காலத்தில் - முழு நிறைவேற்று அதிகாரத்துடன் எமக்குக் கிட்டப்போகும் பதவி இது. அதை ஒழிப்பதற்குத் துணைபோய் அந்த அதிகாரத்தை அனுபவிக்கும் வாய்ப்பைக் கோட்டைவிடுவதா?' என்ற ரீதியில் அரசுத்தரப்பு சிந்திக்கக்கூடாது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும் என்பதே நாட்டின் பெரும்பான்மை மக்களின் விருப்பம். அதை நிறைவு செய்வது அரசியல்வாதிகளின் - அரசியல் பதவிகளை அலங்கரிப்பவர்களின் - கடமை, பொறுப்பு.

அதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

### ரி.ரி.என். ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும்

# மாணவருக்கான மாபெரும் வினா-விடைப் போட்டிகள்

## வெற்றி பெறுபவருக்கு ரூபா ஒரு லட்சம் பணப்பரிசு

யாழ்ப்பாணம்,ஒக்.26

பிரான்ஸில் இருந்து இயங்கும் தமிழ்த் தொலைக்காட்சி இணையம் ரி.ரி.என். குடாநாட்டு மாணவர்களிடையே பெரிய அளவிலான வினா - விடைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தப்போட்டியின் இறுதியில் வெற்றிபெறும் மாணவருக்கு ரூபா ஒரு லட்சம் பரிசுத் தொகை அந்த மேடையில் வைத்தே வழங்கப்படும். இதுதவிர போட்டியில் இரண்டாம் இடம் பெறுபவருக்கு ரூபா 50 ஆயிரம் உட்பட கலந்துகொள்ளும் அனைவருக்குமாக மொத்தம் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான பணப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. முதற்கட்டமாக யாழ்.கல்வி வலயத்தில் இருந்து 208 மாணவர்கள் இந்தப் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் முதலாம் வருடம் கற்கும் மாணவரிடையே இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது.

மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியை ரி.ரி.என். நிர்வாகம் வலயக் கல்விப்பணிமனை ஊடாக ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. மாணவர்களின் கல்விச் செயற்பாட்டின் அடிப்படையில் அவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்று கூறப்பட்டது.

போட்டி நான்கு விடயங்களை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும். மாணவர்களின் பாடப்பரப்பு, தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம், பொது அறிவு, தகவல் தொழில்நுட்பம் ஆகிய நான்கு விடயப் பரப்புக்குள்ளேயே கேள்விகள் கேட்கப்படும்.

8 சுற்றுக்களைக் கொண்டதாக போட்டி அமையும். ஒவ்வொரு சுற்றிலும் மாணவர்களைக் குழுக்களாகக் கொண்ட அமர்வுகள் இடம்பெறும். அதில் வெற்றிபெறும் இரு மாணவர்கள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறுவர். ஒவ்வொரு சுற்றிலும் இருந்துவெளியேற்றப்படும் மாணவர்களுக்கும் பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

இதன்படி முதற்சுற்றில் வெளியேற்றப்படும் மாணவர்களுக்கு தலா 100 ரூபா வீதமும் இரண்டாவது சுற்றில் வெளியேற்றப்படுபவர்களுக்கு தலா 200 ரூபா வீதமும் மூன்றாவது சுற்றில் வெளியேற்றப்படுவோருக்கு ரூபா 400 வீதமும் நான்காவது சுற்றில் வெளியேற்றப்படுவோருக்கு தலா 2ஆயிரம் ரூபாவும் ஐந்தாம் சுற்றில் வெளியேற்றப்படுவோருக்கு தலா 3ஆயிரம் ரூபாவும் ஆறாவது சுற்றில் வெளியேற்றப்படுபவர்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா வீதமும் ஏழாவது சுற்றில் வெளியேற்றப்படுபவர்களுக்கு 10ஆயிரம் ரூபா வீதமும் இறுதிச் சுற்றில் வெளியேற்றப்படுபவருக்கு 50ஆயிரம் ரூபாவும் வென்றவருக்கு ஒரு லட்சம் ரூபாவும் பணப்பரிசில்களாக வழங்கப்படும்.

ரி.ரி.என். சேவையுடன் குடாநாட்டு மக்களையும் இணைக்கும் திட்டத்தின் ஒருபகுதியாகவே இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது. போட்டி நிகழ்வுகள் ரி.ரி.என்.இல் ஒளிபரப்புச் செய்யப்படும். (ம)

# தென்மராட்சி மின் விநியோகம் அடுத்த வருடமே சாத்தியமாகும்

## பிரதிப் பொதுமுகாமையாளர் 'உதயனு'க்குத் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.26

தென்மராட்சிப் பிரதேசத்துக்கான மின் விநியோகத்தை அடுத்த வருட முற்பகுதியிலேயே ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும் என மின்சாரசபையின் வடமாகாணப் பிரதிப் பொதுமுகாமையாளர் இ.முத்துரட்ணானந்தன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பகுதிக்கான மின்விநியோகம் குறித்து அவர் 'உதயன்' செய்தியாளரிடம் மேலும் தெரிவித்ததாவது:-

முதற்கட்ட நடவடிக்கையாக கைதடிப் பிரதேசம் வரையான சுமார் 9.5 கிலோமீற்றர் தூரத்துக்கான மின்விநியோக விரிவாக்க வேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

இதற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது.

தொடர்ந்தும் மின்விநியோகத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்கவுள்ளது. நிதி கிடைத்தவுடன் கைதடியில் இருந்து சாவகச்சேரி வரையுள்ள 6.4 கிலோமீற்றர் பகுதிக்கான மின் விநியோக விரிவாக்க வேலைகள் ஆரம்பிக்கப்படும் - என்றார். (எ-9)

# மீளக்குடியமரவும், சேதங்களை மதிப்பிடவும் நாகர்கோவில் பகுதி மக்களை அனுமதிக்குக!

## பாதுகாப்புச் செயலருக்கு மாவை எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

நாகர்கோவில் பகுதி மக்கள் தமது இடங்களில் மீளக் குடியமரவும், சேதமடைந்த தமது வீடுகள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

நாகர்கோவில் மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சபையினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து மாவை சேனாதிராஜா எம்.பி. பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'யுத்த சூழ்நிலைகளையடுத்து நாகர்கோவில் பகுதியை விட்டு வெளியேறி அகதிகளாகவுள்ள மக்களுள் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இன்னமும் வெளி இடங்களிலேயே வாழ்ந்துவருகின்றனர்.

அவர்கள் தமது நாளாந்த வாழ்க்கைக்குக்கூட ஊதியம் பெறமுடியாமல் மிகவும் கஷ்டப்படுகின்றனர். அத்துடன் அவர்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்குப் பெரிதும் விருப்பம் கொண்டுள்ளனர்.

எனினும், அவர்களின் குடியிருப்புப் பகுதிகள் இன்னமும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அவர்கள் மீளக்குடியமர முடியாத நிலை உள்ளது.

எனவே, முதற்கட்டமாக நாகர்கோவில் மேற்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சபையைச் சேர்ந்த ஏழு பிரதிநிதிகள் அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் மற்றும் மூன்று கிராம அலுவலர்கள் ஆகியோருடன் தமது வதிவிடங்களுக்குச் சென்று மீளக்குடியமர்வதற்கான ஒழுங்குகள், செலவீனங்களின் மதிப்பீடு போன்ற கணிப்பீட்டினை மேற்கொண்டு வருவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.'

- என்று அதில் மாவை எம்.பி. கேட்டுள்ளார். (எ-ரி)

### சுமார் 20 வருடங்களின் பின்னர்

# குடாநாட்டில் மீண்டும் 'றோலர்'மூலம் மீன்பிடி

குருநகர்,ஒக்.26

யாழ்.குடாநாட்டில் சுமார் 20 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் பாரிய 'றோலர்'கள்மூலம் மீன்பிடிக்கும் தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குருநகர் மீனவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கென 5 றோலர்கள் குருநகர் இறங்குதுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. குருநகர் மீனவர்களுக்குச் சொந்தமான இந்த 'றோலர்'களில் மூன்று வன்னியில் இருந்து குடாக் கடலூடாக குருநகர் இறங்குதுறைக்குக் கொண்டுவரப்பட்டது. மற்றைய இரண்டு 'றோலர்'கள் மன்னாரில் விலைக்கு வாங்கப்பட்டு தரைப்பாதையூடாக குருநகருக்கு எடுத்துவரப்பட்டன.

நேற்றுமுன்தினம் இரவு தொழில் செய்வதற்காக 'றோலர்' மூலம் மீனவர்கள் குடாக்கடலுக்குச் சென்றதாக குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேநேரத்தில் குடாக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் பலர் நேற்றுமுன் தினம் இரவு தமது தொழிலை முடித்துக்கொண்டு இரவுநேரமே கரை திரும்ப குருநகர் இறங்குதுறையில் உள்ள இராணுவத்தினர் அனுமதித்ததாக அவர்கள் தெரிவித்தனர். (ம-51)

### நாளை

ஐப்பசி 10
ஞாயிற்றுக்கிழமை
(27.10.2002)
திதி: ஷஷ்டி
முன்னிரவு 7.28 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
பிற்பகல் 4.12 வரை.
சுபநேரம் : 9.03 - 10.33
ராகுகாலம் : 4.23 - 6.03
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

மிகப்பெரிய உண்மை இது - வல்லமைதான் வாழ்வு; பலவீனமே மரணம்.

# திருகோணமலை கமநல திணைக்கள அதிகாரி லஞ்சத்தடுப்பு பிரிவால் கைது

திருகோணமலை,ஒக்.26

திருகோணமலை உள்துறைமுக வீதியில் இருக்கும் கமநலசேவைகள் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் லஞ்ச ஊழல் குற்றத்தடுப்புப் பிரிவினரால் அவரது இல்லத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிகிறது.

மொறவேவப் பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையின விவசாயி ஒருவரிடம் லஞ்சமாக 50ஆயிரம் ரூபாவை பெற முயன்ற போதே அவர் கைது செய்யப்பட்டார் எனக் கூறப்படுகிறது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:

ஜப்பானின் நிதியுதவியுடன் வறிய விவசாயிகளுக்கு இலகுகடன் தவணை அடிப்படையில் குபேட்டா இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. ஒன்றின் பெறுமதி 4 லட்சம் ரூபா. எனினும், அரசு ஒருலட்சத்து 72ஆயிரம் ரூபாவை சலுகை அடிப்படையில் வழங்குகின்றது. இந்த உழவு இயந்திரம் ஒன்றை வழங்கவே லஞ்சம் கோரப்பட்டதாக சம்பந்தப்பட்ட விவசாயி இதனைப் பொலீஸாருக்கு அறிவித்திருக்கின்றார்.

நடந்தவை பற்றி தமக்கு அறிக்கை தரும்படி கொழும்புத் தலைமைச் செயலகம் திருகோணமலை செயலகத்தைக் கேட்டுள்ளது. (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

NISSAN VANETTE VAN 50 டீசல் வாகனம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.16, கண்டி வீதி, சாவகச்சேரி. (9867)

8 அடி உயரம், 15 அடி அகல சுருக்கு Gate விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பஞீசு (ரிங்கர்), சிவகுருநாதன், 221, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (9904)

இரண்டு மாதங்கள் நிரம்பிய, அழகிய, வெண்ணிற நாய்க்குட்டிகள விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.கஜன், 628/3, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (9901)

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், தொட்டிக்குரிய மோட்டர்கள், அழகு சாதனப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடிவீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம். (9900)

பொமரேியன் கறுப்பு ஆண் (நரை) பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நடராசா, செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு (பலாலி றோட், சந்திப்பிள்ளையார் கோயில் அருகில்). (9892)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9777)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1kg 120/-, சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு: இல.85, செம்மணி வீதி, நல்லூர் (கல்விக்கந்தோருக்கு அருகில்). (9910)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. புறொயிலர் மிகவும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. புறொயிலர் மொத்த கொள்வனவுகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு. தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டைப்பிராய். (9909)

## கோழித்தீன் விற்பனை

Original Prima கோழித்தீன் 21.10.2002 தொடக்கம் 27.10.2002 வரை விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9720)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 31-10-2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். முற்பதிவு செய்யவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9776)

## ஜோதிடம்

உங்கள் ஜாதக பலன்களை அறிந்திடவும், திருமணப் பொருத்தம், எண் கணித பலன்கள் அறிந்திடவும் உடன் தொடர்பு கொள்ளவும். அத்துடன் திருமண சேவையும் செய்யப்படும். தொடர்பு: N.கந்தையா, மூத்த விநாயகர் கோயிலடி, ஆனைகோட்டை. (9478)

## பொய்யாமொழி ஜோதிடம்

விவாகத்தடை, தொழிற்தடை கல்வித்தடை சகல ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும் (பலன தவறினால் பணம் திரும்பப் பெறலாம்) சனி, செவ்வாய்க்கிழமைகளில் 140, பருத்தித்துறைவீதி, நல்லூர் ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயிலடியிலும், ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் பழம்பிள்ளையார் கோயிலடியிலும் சந்திக்கலாம். (9873)

## மணமகள் தேவை

கனடாவில் அரச பணியாற்றும், 42 வயது, அனுஷம் (இரண்டாம் பாதம்) மணமகனுக்கு நற்குணமுடைய மணமகள் தேவை. (குடும்பநிலை, கல்வி, அழகு கருத்திற்கொள்ளப்படும்) முழுவிவரங்களுடனும் விண்ணப்பிக்கவும். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: டாக்டர் A.காந்தநேசன், மூளாய் தெற்கு, சுழிபுரம். (9905)

## திருமண சேவை

1970, அனுஷம், செவ்வாயற்ற கிரஹபாவம் கூடிய பட்டதாரி ஆசிரியைக்கு உள்ளூர்/வெளியூர் மணமகன் தேவை. சீதனம் உண்டு. மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள்: துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (9903)

## தவறிவிட்டது

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த வினோதினி பழனிச்சாமி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.786621410V), விசேட அடையாள அட்டை (0901024905) என்பன அச்சுவேலிப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: சியான் ரேடர்ஸ், அச்சுவேலி. (9872)

ஐந்து ஜாதகங்களும், இரண்டு போட்டோக்களும் அடங்கிய கைப்பை மானிப்பாயில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் குமார் உணவகம், மருதடி, மானிப்பாய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் (சன்மானம் வழங்கப்படும்). (9869)

சங்கானை கிழக்கு, தொட்டிலடியைச் சேர்ந்த க.சண்முகசுந்தரம்பாள் (இல.407230523V), கநாகேஸ்வரி (இல.686902404V) எனபவர்களது தேசிய அடையாள அட்டைகள 23.10.2002 அன்று யாழ்.பஸ் தரிப்பிடத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் கொடுத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (9899)

புதுவளவு, கோப்பாய் தெற்கைச் சேர்ந்த க.ஜெயபாலனின் 108ஸ்ரீ-6753 மோட்டார் சைக்கிளின் சான்றிதழ், காப்புறுதி வரிப்பத்திரம் என்பன உடுவிலுக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட விலாசத்திற்கு அறியத்தரவும். (9907)

## வகுப்புக்கள்

Maths, English, O/L பரீட்சையில A,B,C பெறுபேறடையவும், தரம் 8,9,10 உட்பட Paper Class, ஆங்கிலம், A/L, G.A.Q. வகுப்புக்களுககும் கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி, கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (9865)

## O/L கணித வகுப்பு

37வருட அனுபவமுடைய ஆசிரியரினால் O/L இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் சகல அலகுகளையும் ஆரம்ப அறிவிலிருந்து அதிவிசேட தரத்தில் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினா-விடை வகுப்புக்களும் 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் A பெறுபேறடைவதற்கு நிறைவேற்றப்படும். தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (9884)

## ஆலயம் புனரமைப்பு

கைதடி,ஒக்.26

கடந்தகால யுத்த நடவடிக்கைகளினால் சேதமடைந்திருந்த கைதடி நவபுரம் அருள்மிகு துர்க்கையம்மன் ஆலயம் அப்பகுதி மக்களின் உதவியுடன் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. (எ-75)

## தொலைபேசி இணைப்புக்கள் துண்டிப்பு

தென்மராட்சி,ஒக்.26

தொலைபேசி சேவைக் கட்டணம் செலுத்தாத யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 150இற்கும் மேற்பட்ட மோட்டறோலா தொலைபேசி இணைப்புக்கள ரெலிகொம் நிறுவனத்தினால் துண்டிக்கப்பட்டுள்ளன.

தொலைபேசி இணைப்பு பெற்றபோது வழங்கப்பட்ட சோளரின் பராமரிப்புச் செலவு தொகையென வருடத்திற்கு 26 ஆயிரத்து 400 ரூபா வீதம் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இதுவரை இத்தொகையைச் செலுத்தாத 150 பேரின் தொலைபேசி இணைப்புக்களே துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரெலிகொம் நிறுவனத்தினால் கடந்த ஆண்டு சோளர் பராமரிப்புச் செலவுக கட்டணத்தினை கட்டம் கட்டமாக செலுத்துமாறு கால அவகாசம் கொடுத்தும் இதுவரை செலுத்தாதவர்களின் இணைப்புக்களே துண்டிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (ம-117)


**BITSMANS**

கல்வி நிறுவனம், மானிப்பாய்

A/L 2003 ஓட்டமின்னியல்

ஆசிரியர்: திரு. ஜெயசீலன் B.Sc.(Hons)

ஆரம்பம்: 27-10-2002 SUN 4.30p.m.

(9875)

**FOR SALE**

SCAM 10002
CCD - TRV 56E
SONY CAMCORDER

Inspection at FORUT 67, Temple Road, Jaffna.

On Monday the 28th & Tuesday, 29th 9 a.m to 5 p.m.

(C-24422)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவன்

**செல்வன் அன்ரன் ஜெறி ஜோன்சன்**

அவர்கள் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை 2002இல் 136 புள்ளிகள் பெற்று சித்திபெற்றமைக்காக அவரைப் பாராட்டுவதுடன், அவரைக் கற்பித்து அறிவூட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறி அவர் மேன்மேலும் கல்வியில் சிறப்புற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

*128, தங்கவில்லா, யாழ்.வீதி, மானிப்பாய்.* (9896)

அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தி, மாமன்மார், மாமிமார்கள், பெரியப்பாமார்கள்.

## குருத்துவ வெள்ளி விழா - வாழ்த்து -



குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும்

**அருட்பணி பொனிபஸ் F.வஸ்தியாம்பிள்ளை**

*அவர்களின் பணிவாழ்வு சிறக்க வாழ்த்துகின்றோம்.*

*சென்.ஜேம்ஸ் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.* (9893)

திரு.ஜி.பி.பேமினஸ் குடும்பத்தினர்,
திருமதி சிபியான் பிலிப் குடும்பத்தினர்,
திரு.இராசநாயகம் குடும்பத்தினர்,
திருமதி யூஜின் யூலியஸ் குடும்பத்தினர்,
திரு.பிலிப் பிரேமன் குடும்பத்தினர்.

## நீங்காத நினைவில் ஈராண்டு

தோற்றம் 14 - 10 - 1925



மறைவு 20 - 10 - 2000

**திருமதி செல்லையா நல்லம்மா**

*அன்பிற்கும் பண்பிற்கும் உதாரணமாகி
வாழ்ந்து எங்களை அரவணைத்து
நல்வழி காட்டிய எங்கள் அன்பு அம்மாவே!
உங்கள் ஆத்மா இறைவனடியில்
நிரந்தர சாந்தியடையப் பிரார்த்திப்போம்.*

*சன்லைட் றைக்கிளீனேர்ஸ், 23, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.*

- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(9908)


PX சிறந்த பூஸ்டர் நியாய விலையில்





- எந்தவொரு பலவீன சமிக்ஞைப் பகுதியிலும் பெறக்கூடிய தாயுள்ள 35 உயர் பூஸ்டர் தொழிற்பாடு.
- மிகு நேர்த்தி நுட்பம் வாய்ந்த தாழ்வான ஓசை
- உங்கள் வீட்டின் உட்புறத்துடன் பொருந்தும் நீருட்புகா டியூலக்ஸ் உறை.

TV சென்டர் (Pvt. Ltd.)
4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11, தொ.பேசி: 434742
தொலைநகல்: 437687 மின் அஞ்சல்: tvcentre@eureka.lk

PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது.



மேகங்களுக்குள்ளே சௌகரியமாகவும் வசதியாகவும்



இப்போது ஒரு மணித்தியாலத்தில் கொழும்பில்

யாழ்ப்பாணம்



* பாதுகாப்பு * கருணை சேவை
* சௌகரியமாகவும் வசதியாகவும்

ரூ. 2425/= ஒரு பயணத்திற்கு

ஞாயிறு உட்பட கிழமைக்கு 10 முறை விமான பயணம்

பயண சீட்டுகள் பெற்றுக்கொள்ளும் இடங்கள்:
செரன்டிப் எக்ஸ்பிரஸ் பிரைவட் லிமிடட் - 500, காலி வீதி, கொழும்பு 6. தொலைபேசி: 505632-3, 500626
செரன்டிப் எக்ஸ்பிரஸ் பிரைவட் லிமிடட் - கொழும்பு விமான நிலையம், ரத்மலானை. தொலைபேசி: 625777
சீ-கேன் ஏவியேஷன் பிரைவட் லிமிடட் - வெல்லவத்தை. தொலைபேசி: 074-719600 பெக்ஸ்: 074-512458
சீ-கேன் ஏவியேஷன் பிரைவட் லிமிடட் - கொழும்பு 01. தொலைபேசி: 074-719602-4
பிரமிட் எயர் சர்விசஸ் லிமிடெட் - கொழும்பு 11. தொலைபேசி: 448719 / 338321 பெக்ஸ்: 448104
மனோஜ் எக்ஸ்பிரஸ் சர்விசஸ் - கொழும்பு 13. தொலைபேசி: 390128, 074-612656, 0777-517019
மனோஜ் எக்ஸ்பிரஸ் சர்விசஸ் - யாழ்ப்பாணம் தொலைபேசி: 0777-801038, 0777-512648 பெக்ஸ்: 021-2222508

செரன்டிப் எக்ஸ்பிரஸ் - மாற்றத்தை உணருங்கள்

Renaissance

# அமைதியை ஏற்படுத்துவதாகக் கூறிக்கொண்டு அநியாயத்துக்கு அங்கீகாரமளிக்கலாகாது

## ஈ.பி.டி.பி. மதனராஜாவின் பேச்சுக்கு 'ஓ' போட்டது ஜே.வி.பி.

இன ஒடுக்குமுறைக்குள்ளாகிய வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும்போது அவர்களை மாக்சிஸ ஒடுக்குமுறைக்கு உட்படுத்திவிடக் கூடாது. அநியாயங்களுக்கு அங்கீகாரம் கொடுத்து சமாதானத்தை ஏற்படுத்தமுடியாது என்று ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ந.மதனராஜா கூறினார்.

இணைந்த வீடுகள் சொத்தாண்மை திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்களை கடுமையாக விமர்சித்தார். அவரது உரையை ஜே.வி.பியினர் கரகோஷமிட்டு வரவேற்றனர்.

மதனராஜா எம்.பி. மேலும் கூறியதாவது:-

சமாதானமென்ற பெயரில் வடக்கு-கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் ஓர் ஆயுதம் தாங்கிய ஒடுக்குமுறையாளரின் கீழ் அடங்கி ஒடுங்கி மௌனித்து வாழவேண்டுமென்ற ஒரு கட்டாயத்தை அவர்கள்மீது சுமத்துவதை நாம் ஏற்கமுடியாது. நாம் இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிவிட்டு, மற்றொரு பாசிஸ ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் ஏற்பாட்டைச் சமாதானமென்று ஏற்கமுடியாது. இது சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுகின்ற கதை.

சமாதானம் என்பது உண்மையிலே என்ன? ஒடுக்குமுறைகள் எந்த வடிவத்திலும் இல்லாத - சகல அரசியல் கட்சிகளுக்கும் சுதந்திரமாக தத்தம் அரசியல் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கக்கூடிய - ஜனநாயகமும், பன்மைத்துவமும், மனித உரிமைகளும் உத்தரவாதப்படுத்தப்படுகின்ற சமாதானமே எமக்குத் தேவை.

அமைதி என்பதன் அர்த்தம் 'நிறைவு' என்பதேயாகும். மாறாக 'நிசப்தம்' அல்ல. சுடுகாட்டில் நிலவும் அமைதியும் அமைதிதான் ஒரு சோலையில் நிலவும் அமைதியும் அமைதிதான். சுடுகாட்டில் நிலவுவது மரணத்தின், நிசப்தமாக்கப்பட்ட உறைந்துபோன அமைதி. சோலையில் நிலவுவது ஜீவராசிகளின் ஒத்திசைந்த சகவாழ்வின் மகிழ்ச்சியைப் பிரதிபலிக்கும் உயிர்ப்பின் அமைதி.

நாம் நாட்டை, வடக்கு - கிழக்கை ஒரு சுடுகாடாக்கி, யாவுமே நிசப்தமாக்கப்பட்ட அமைதியை சமாதானம் என்ற பெயர்கொண்டு அழைக்கத் தயாராக இல்லை. நாம் வேண்டுகின்ற சமாதானம் ஜனநாயகம், பன்மைத்துவம், மனித உரிமைகள் ஆகியவற்றுடன் கூடிய சமாதானமேயாகும்.

நாம் சமாதானத்துக்கு எதிரானவர்கள் அல்லர். சமாதானத்துக்காகவே நாமும் பாடுபடுகிறோம். ஆனால், நாம் பெறுகின்ற சமாதானம் அர்த்தமுள்ள சமாதானமாக இருக்கவேண்டும்; உண்மையான சமாதானமாக இருக்கவேண்டும் என்பதிலேயே நாம் அக்கறை காட்டுகிறோம். பெயருக்கு சமாதானம் என்று கூறிக்கொண்டு வடக்கு - கிழக்கில் நடக்கும் அநியாயங்களுக்கெல்லாம் அங்கீகாரம் வழங்கிவிட நாம் தயாராக இல்லை. ஏனெனில், நாம் எமது மக்களுக்குப் பொறுப்புச் சொல்லவேண்டியவர்களாக இருக்கிறோம்.



நாடாளுமன்றத்திலிருந்து...

உண்மையான சமாதானமென்பது மக்களுக்கு நிம்மதியையும் மகிழ்ச்சியையும் கொடுக்கவேண்டும். இனப்பிரச்சினையின் அடிப்படைக் காரணிகளுக்குத் தீர்வுகாண்பதாக இருக்கவேண்டும். ஆனால், இப்போ வடக்கு - கிழக்கில் என்ன நிகழ்கிறது?

இது யாவருக்கும் தெரிந்த உண்மை. இந்தச் சபையில் வடக்கு-கிழக்கு மக்களின் வாக்குகளை ஏதோ ஒரு வகையில் ஈட்டிக்கொண்டு பிரதிநிதித்துவம் வகிக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் தெரிந்த உண்மை. அங்கு மக்களிடம் பலவந்தமாக கப்பம், தண்டம், வரியென்ற பெயர்களில் நிதி அறவிடப்படுகின்றது. இந்தக் கூட்டமைப்பினர்தமது மக்களை இந்தச் சொல்லொணாக் கொடுமையிலிருந்து விடுவிக்க என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? அவர்கள் இச்செய்திகள்கூட வெளிவராது ஒளித்து மறைப்பதைத்தான் செய்தார்கள்.

வடக்கு - கிழக்கில் இதுவரை எத்தனை பேர் காணாமற்போய்விட்டார்கள். கடத்தப்பட்டார்கள், மிரட்டப்பட்டார்கள் என்பது பற்றி அவர்கள் அறிவார்களா? அறிந்தாலும் வாய் திறந்து ஒரு வார்த்தை கூறுவார்களா?

மட்டக்களப்பிலே 'தினக்கதிர்' என்ற ஒரு பத்திரிகை வெளிவந்துகொண்டிருந்தது. அந்தப் பத்திரிகை புலிகளுக்கு ஆதரவாகவே எழுதியும் வந்தது. ஆனால், அந்தப் பத்திரிகை புலிகளால் பலவந்தமாக நிறுத்தப்பட்டு அதன் பதிப்பக சாதனங்களெல்லாம் அபகரிக்கப்பட்டன. இது பத்திரிகைச் சுதந்திரத்துக்கு இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் அப்பட்டமாக விழுந்த ஒரு மரணஅடி. கிழக்கு மாகாணத்தைச் சார்ந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் கேட்கிறேன். நீங்கள் சொர்ப்பனத்தில் வாழ்கிறீர்களா? இப்படியொரு விடயம் நிகழ்ந்ததையாவது நீங்கள் வாய்திறந்து கூறியிருக்கிறீர்களா? உங்கள் பிரபல்யத்துக்காக, அந்தப் பதத்திரிகைக் காரியாலயத்துக்குப் படியேறிச் சென்று செய்தி கொடுக்கின்ற நீங்கள், அது நிர்மூலம் செய்யப்பட்டபோது ஏன் மௌனித்துப் போனீர்கள்?

இதே அனுபவம் வெகு சீக்கிரம் யாழ்ப்பாணத்தில் உள்ள சில பத்திரிகைகளுக்கும் நிகழக்கூடுமென நான் அஞ்சுகிறேன். நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமான வழிகளிலாவது இது நிகழலாம். ஏனெனில், இதுவரை அங்குள்ள சில பத்திரிகைகளைப் பயன்படுத்திக்கொண்டு வந்த புலிகள், இப்போது தமது பத்திரிகை நிறுவனங்களை அங்கு ஸ்தாபிக்க ஆரம்பித்துவிட்டதாக அறிகிறேன். அதனால் அவர்கள் அங்கு மற்றைய பத்திரிகைகளைத் தடைசெய்ய விழையலாம். அப்படியேதும் நிகழ்ந்தால், தினக்கதிருக்கு மௌனம் சாதித்தது போலவே கூட்டமைப்பினர் மௌனித்திருப்பர். எம்மை விமர்சிக்கும் பத்திரிகைகளின் உரிமைக்காகவும் நாமேதான் குரல் கொடுப்போம். 'உன் கருத்துக்களை நான் ஏற்காவிடினும், உன் கருத்தை நீ சொல்ல உனக்குள்ள உரிமை நிராகரிக்கப்படுவதற்கெதிராக, நான் உனக்காகப் போராடுவேன்' என்ற அந்த ஜனநாயகத்தின் கருத்தியலை நாம் அப்போது கடைப்பிடிப்போம்.

எனவேதான் நாம் ஜனநாயகத்தையும் பன்மைத்துவத்தையும் மனித உரிமைகளையும் சமாதானத்தின் மிக மிக அத்தியாவசியமான கூறுகள் என வலியுறுத்துகிறோம். இவையற்ற சமாதானம் வெறும் உயிரற்ற உடலுக்குச் சமன்.

நாம் வலியுறுத்தும் இவ்விடயங்கள் தற்போது புலிகளிடம் சரணாகதி அடைந்திருக்கும் கூட்டமைப்பின் கட்சிகளுக்கும்கூட உள்ளூர விருப்பமான விடயங்கள்தான். ஆனால், அவர்கள் அதை வெளிப்படையாகக் கூற முன்வரமாட்டார்கள். ஏனெனில் , அவர்கள் புலிகளால் அடிமைப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளார்கள். இதை வெளிப்படையாக அவர்களே கேட்கும்படி புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் அண்மையில் இலங்கைத் தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு தாய்லாந்தில் வழங்கிய பேட்டியொன்றில் கூறியுள்ளார். அந்தப் பேட்டி பத்திரிகையொன்றிலும் வெளிவந்திருந்தது.

அதில் அவர் 'புலிகள்தான் ஒரே தேசிய விடுதலை இயக்கம். இங்கு அரசியல் கட்சிகளுக்கு இடமில்லை' எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இதன்மூலம் பன்மைத்துவத்துக்கு சாவுமணியடித்துள்ளதுடன் கூட்டமைப்பினரையும் தூக்கி வீசியுள்ளார்.

நானறிந்த வரையில் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒரேயொரு தலைவர்தான் இப்பேட்டி குறித்து தனது எதிர்ப்பை பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார். அவர் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரிதான். அதையும் அவர் கனடா சென்று அங்குள்ள தமிழ் வானொலி சேவையொன்றில்தான் கூறியுள்ளார். அவர் மற்றொரு முக்கியமான கருத்தையும் அங்கு வெளிப்படுத்தினார். 'விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு அழையுங்கள்; அவர்களுடன் பேசுங்கள் என்று கூறினால், அவர்கள்தான் - புலிகள்தான் - ஏகபிரதிநிதிகளென்று இல்லை. நாங்கள் ஒரு கட்சி. எங்களுக்கென்று ஒரு கொள்கையிருக்கிறது' என்று அவர் கூறினார்.

இந்தச் சுயமரியாதை உணர்வு அவருக்குத் தன்னும் எஞ்சியிருப்பதையிட்டு நான் அவரைப் பாராட்டுகிறேன்.

இதேபோல் சுரேஷ் பிரேமச்சந்திரனும் பாலசிங்கத்தின் பேட்டி குறித்து 'நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போல் இருக்கிறது' என்று தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தாக பத்திரிகையொன்றில் நான் படித்தேன். ஆனால், இவர்கள் விரும்பினார்களோ இல்லையோ, அவர் சார்ந்த கூட்டமைப்பு, புலிகளையே ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டுள்ளதென்பதுதான் உண்மை.

ஏகபிரதிநிதி என்ற கருத்து, ஜனநாயகத்துக்கு முரணானது; பன்மைத்துவத்துக்கு சாவுமணியடிப்பது; நவீன உலகில் எங்குமே இல்லாதது; மாற்றுக் கருத்துக்களை மறுதலிப்பது. நூற்றுக்கு நூறு சதவீதமான ஆதரவான நிலையென்பது மன்னர் காலத்திலும் இருந்ததில்லை. 0.1 சதவீதமான மக்கள் எதிர்க்கருத்துடையவர்களாக இருந்தாற்கூட ஏக பிரதிநிதித்துவம் என்பது நிராகரிப்பட்டு விடுகிறது. பன்மைத்துவமே தற்போது உலகளாவிய அளவில் முன்னிறுத்தப்படும் கருத்தாகும்.

இந்த உண்மை தெரியாமல், தாமே ஏதோ ஒருவகையில் புலிகளால் நிராகரிக்கப்பட்டவர்களாக இருந்துகொண்டும், மற்றவர்களை நிராகரிக்கும் ஏகபிரதிநிதித்துவம் என்ற புலிகளின் சர்வாதிகாரக் கோட்பாட்டுக்கு இக்கூட்டுக் கட்சியினர் அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்துவிட்டனர். தாம் அடிமைகளாவது மட்டுமன்றி, மக்களையும் கொத்தடிமைகளாக வாழ நிர்ப்பந்திப்பதுதான் இங்கு சகித்துக்கொள்ள முடியாதது.

எனவே, இந்த அரசு சமாதானத்தையீட்டுவதற்கு முன்வந்திருப்பதை நாம் குறைகாணவில்லை. மாறாக மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். ஆனால், சமாதானமென்ற பெயரில் மற்றோர் ஒடுக்குமுறைக்குள் வடக்கு - கிழக்கு தமிழ்,முஸ்லிம் மக்களைத் தள்ளிவிடாது உண்மையான சமாதானத்தை இனங்கண்டு மேற்கொள்ள வேண்டுமென்பதையே இங்கு வலியுறுத்துகின்றோம். சமாதானம் என்ற பெயரில் எடுக்கப்படுகின்ற ஒவ்வொரு நடவடிக்கையிலும் ஜனநாயகம், பன்மைத்துவம், மனித உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். என்பதே எமக்குள்ள அக்கறை. ஜனநாயகத்தையும் பன்மைத்துவத்தையும் மனித உரிமைகளையும் நசுக்கி அழித்துக்கொண்டு ஒரு சமாதானம் எங்குமே உருவாக்கப்படமுடியாதென்ற உண்மையை யாவரும் உணரவேண்டும் - என்றார்.

(எ)

# இணைந்த வீடமைப்புத் தொகுதிக் குடியிருப்பாளர்களுக்கு வீட்டு உறுதிப்பத்திரங்கள் விரைவில் வழங்கப்படும்

## இது தொடர்பான திருத்தச் சட்டமூலத்தைச் சமர்ப்பித்து அமைச்சர் ஆறுமுகம் உரை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கட்டப்பட்டுள்ள இணைந்த வீடமைப்புத் தொகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு, அவ்வீடுகளுக்கான உறுதிப்பத்திரங்கள் மிகவிரைவில் வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நாடாளுமன்றத்தில் கூறினார்.

அரசுக்குச் சொந்தமான இணைந்த வீட்டுத் தொகுதிகளுக்கான(உரிமை) உறுதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பான திருத்தச் சட்டவரைவு ஒன்றை வீடமைப்பு நிர்மாண, தோட்ட உட் கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்தச் சட்டமூலம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அரசின் நூறுநாள் வேலைத் திட்டத்தின்கீழ் கணிசமான அளவு வீடுகளுக்கு உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்குத் திட்டமிட்டுச் செயற்பட்டோம்.

இதற்கேற்ப இணைந்த வீடுகள் கொத்தாண்மைச் சட்டத்தில் திருத்தம் ஒன்று கொண்டுவரப்பட்டதன் மூலம் 2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை அவகாசம் வழங்கப்பட்டது.

எனினும், குறிப்பிட்ட காலத்திற்குள் உறுதிகள் வழங்கமுடியாது போனதால் இந்தக் காலஅவகாசத்தை 2003 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே இத்திருத்தம் கொண்டுவரப்படுகின்றது என்றும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறினார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளையும் சுட்டிக்காட்ட அமைச்சர் தவறவில்லை.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் கட்டப்பட்டிருக்கும் சில வீட்டுத் தொகுதிகளின் பொது வரைபடத் தொகுதி, உள்ளூராட்சி சபைகளிலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலும் முறைப்படி பதிவு செய்யப்படவும் இல்லை. அங்கீகரிக்கப்படவும் இல்லை.

இதனால், இவ்வீட்டுத் தொகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு அவ்வீடுகளுக்கான தனித்தனியான வரைபடங்களையும் உறுதிகளையும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எமது நூறு நாள் வேலைத் திட்டத்தின்படி இதுவரை 325 வீடுகளுக்கு தனித்தனியான உறுதிகளும் வரைபடங்களும் வழங்கப்பட்டுள்ளன. கூடிய விரைவில் மேலும் 158 வீடுகளுக்கான உறுதிகள் வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளோம் - என்றும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறினார். (எ)

### யாழ்.குடாநாட்டில்
# மூன்று வாரங்களில் 144.7மில்லிமீற்றர் மழை

யாழ்.குடாநாட்டில் கடந்த முதலாம் திகதி முதல் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9மணிவரை 144.7 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக திருநெல்வேலியில் உள்ள வளிமண்டலவியல் அவதானிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 586.4 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. என்றும் - அந்த நிலையம் அறிவித்துள்ளது.

தொடர்ந்தும் மழை பெய்யக்கூடியதாக காலநிலை சீரின்றிக் காணப்படும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-180)

# கவிதை நூல் வெளியீட்டு விழா

கைதடி,ஒக்.26

இளம் எழுத்தாளர் தி.உதயசூரியனின் 'பெயரறியாப் பெரியோன்' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தில் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத் தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ-75)

### அனுருத்த ரத்வத்தையின்
# வருமான அறிக்கையை சமர்ப்பிக்கக் கோரிக்கை

கொழும்பு,ஒக்.26

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கும் அவரது மனைவிக்கும் சொந்தமானதென நம்பப்படும் 4கோடி .21 லட்ச ரூபா பெறுமதியான வங்கிச் சேமிப்புப் பத்திரங்கள் கைப்பற்றப்பட்டமை தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ள லஞ்ச மற்றும் குற்ற விசாரணை ஆணைக்குழு ரத்வத்தையின் வருமான அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி வருமான வரித் திணைக்களத்தைக் கோரியுள்ளது.

தமது விசாரணைகளை தொடர்ந்து நடத்துவதற்கு இந்த அறிக்கை தேவையாயிருப்பதாகத் தெரிவித்த ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர், சேமிப்புப் பத்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஏழு தனியார் வங்கிகளில் நான்கு வங்கிகளின் சேமிப்புச் சான்றிதழ் பிரிவின் முகாமையாளர்களின் வாக்குமூலங்கள் பெறப்பட்டிருப்பதாகவும் ஏனையோரிடமிருந்து விரைவில் வாக்கு மூலங்கள் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் - அவர் தெரிவித்துள்ளார். (எ)

## முதலாம் ஆண்டின் நீங்கா நினைவலைகள்

மலர்வு 21 - 04 - 1934



உதிர்வு 27 - 10 - 2001

### அமரர் வேதவனம் பாலசுந்தரம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

விழியின் வழியிலே நீங்கள்
விண்ணகம் சென்றாலும் - என்
நெஞ்சின் நினைவுகளிலே
நீங்காது நிலைத்திடுவீர்.

*"கௌரிகிரி",*
*(உபதபால் கந்தோர் சமீபம்),*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (9752)

அன்பு மனைவி
இராசேஸ்வரி பாலசுந்தரம்
(இளைப்பாறிய ஆசிரியை).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

மண் மகிழ 1928 - 02 - 17



கண் நெகிழ 2002 - 09 - 26

### திருமதி நாகரத்தினம் சிதம்பரம்

*ஐயிரண்டு மாதங்கள் உன் கருவறையில் எமைச் சுமந்து*
*காலமது கனிய மண்மகள் மடியிலே தவழ விட்டாய்!*
*இமைக்குள் கண்ணாக கண்ணுக்குள் மணியாக*
*கருத்தோடு எமை வளர்த்து உருவாக்கினாய்!*
*இன்று விழிமூடும் வேளையிலும் எமது*
*விழிகளிலும் நெஞ்சங்களிலும் நிறைந்து நிற்கிறாயே அம்மா!*
*எத்தனை எத்தனை பிறவிகள் எடுப்பினும் அம்மா!*
*உனையன்றிப் பிறிதோர் அன்னை வேண்டுவதில்லை.*

26.09.2002 அன்று எமது குடும்ப விளக்கு அணைந்தவேளை ஓடோடி வந்து அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு, எமது துன்பத்தில் பங்குகொண்டோருக்கும், ஆறுதல் மொழிகள் கூறி எமைத் தேறுதல் செய்தோருக்கும், தொலைத் தொடர்பில் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைக் கூறிக்கொள்வதோடு, **இன்று (26.10.2002)** சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்ற சபிண்டீகரணக்கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து நண்பகல் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*துவாளி வீதி,*
*இமையாணன் மேற்கு,*
*உடுப்பிட்டி.* (9838)

**- குடும்பத்தினர்.**

## மூன்றாம் ஆண்டு நெஞ்சகலா நினைவஞ்சலி

தோற்றம் 07 - 01 - 1932



மறைவு 26 - 10 - 1999

அமரர்

### சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் *(J.P.U.M.)*


*நீங்கள் விட்டுச் சென்ற பணியைத்*
*தொடர உங்கள் ஆசியை வேண்டுகின்றேன்.*

*மல்லாகம்.* (9807) **திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன்.**

## குருத்துவ வெள்ளிவிழா

26.10.2002 இறைபணியில் 25 ஆண்டுகளைப் பூர்த்திசெய்து
குருத்துவ வெள்ளிவிழாக் காணும்

### அருட்தந்தை வஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ் பொனிபஸ்



அவர்கள் ஊர்காவற்றுறை கரம்பொனில் திரு.திருமதி வஸ்தியாம்பிள்ளை - இராசதுரை குடும்பத்தில் நான்காவது பிள்ளையாக 14.05.1947இல் பிறந்தார். ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தவேளை, 1966இல் அப்போதைய கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய பங்குத்தந்தை அருட்திரு.S.பீற்றர் *O.M.I* அடிகள் இவரை அவரது விருப்பத்திற்கிணங்க கண்டி பூரணவத்தை ஆரம்ப குரு மடத்திற்கு அனுப்பிவைத்தார். 1969 வரை ஆரம்ப குருத்துவக் கல்வியைப் பயின்று அம்பிற்றிய பெரிய குருமடத்தில் 1970-1976வரை மேற்கல்வியையும் பயின்றார். இக்கால வெளியில் 27.02.1975 இல் தனது தந்தையை இழந்தார். 26.10.1977இல் அப்போதைய கண்டி ஆயர் மேதகு போல் பெரேரா ஆண்டகை அவர்களினால் கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அந்தநேரத்தில் அவரவர் பிறந்த ஊரின் பங்குக்கோயில்களில் குருக்களைத் திருநிலைப்படுத்தும் வாய்ப்பு இருந்தமையால் கண்டி மேற்றிராசனத்திற்குரிய அருட்திரு.பொனிபஸ் அவர்கள் கண்டி ஆயரினால் பிறந்த ஊரின் கரம்பொன் பங்கில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அன்றைய பூசைப் பலியில் ஆயர் போல் பெரேரா ஆண்டகை தமிழில் இறை உரை ஆற்றியதுடன், "இப்பிரச்சினையான காலத்தில் (1977 ஒகஸ்ட் இனக்கலவரம்) இக்குருவை பாதுகாத்துக் கொள்வது எனது கடமை" என தனது உரையில் குறிப்பிட்டார். அதேபோல் 1977இலிருந்து 1978வரை கண்டி பேராலய உதவி பங்குத் தந்தையாகவும் ,1979இலிருந்து 1980 வரை தலாவாக்கொலை உதவிப்பங்குத் தந்தையாகவும், 1981இலிருந்து 1983 புரட்டாதி மாதம்வரை ஹற்றன் பங்குத் தந்தையாகவும், பணியாற்றினார். பின்னர், 1983 ஒக்ரோபரில் யாழ்.மறைமாவட்டத்தில் பணியாற்ற கண்டி ஆயர் மேதகு லியானி ஜர்னான்டோ ஆண்டகை அவர்களின் அனுமதியுடன் அதிவண. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் யாழ்.மறை மாவட்டத்தில் பணியாற்ற ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

யாழ்.மறைமாவட்டத்தில் தனது பணியை 1983இலிருந்து 1984வரை புனித சவேரியார் குருமடத்திலும், 1985இலிருந்து 1987வரை பருத்தித்துறைப் பங்குத் தந்தையாகவும், 1988இலிருந்து 1991வரை சில்லாலை பங்குத் தந்தையாகவும், 1992 இலிருந்து 1993வரை கிளிநொச்சி பங்குத் தந்தையாகவும், 1994இலிருந்து 1996வரை ஆனைக்கோட்டை பங்குத் தந்தையாகவும், 1997இல் பிலிப்பைன்ஸ் நாட்டில் இறையில் சம்பந்தமான படிப்பிற்காகவும், 1998இலிருந்து 2001 ஆடி வரை குருநகர் பங்குத் தந்தையாவும், 2001ஆவணி மாதம் தொடக்கம் இளவாலை பங்குத் தந்தையாகவும் பணியாற்றிவரும் அருட்தந்தை பொனிபஸ் அடிகளார், தனது 25 வருட குருத்துவப் பணியின் வெள்ளி விழாவை இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் பங்குமக்கள், குருக்கள், கன்னியாஸ்திரிகள், தனது தாய், சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்களுடன் நன்றி திருப்பலியை ஒப்புக்கொடுக்கின்றார். அவரின் இறைபணி மேலும் வளர்ந்திட - இறைவன் அவருக்கு வேண்டிய அருட்கொடைகளை வழங்கிட - பிரார்த்தித்து நல்ல ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

*ஊர்காவற்றுறை.* (C/24241) கிறிஸ்ரி.ஆர்.அஞ்சலோ.

## யாழ்ப்பாணம் பண்டகசாலைக்கு பொருள்களை கொண்டு செல்வதற்காக விலை மனுகோரல்

இக்கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண பண்டகசாலைக்கு பிரதான காரியாலயத்திலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் சிமெந்து, அஸ்பஸ்டஸ், உருக்கு மற்றும் பொருள்களைக் கொண்டுசெல்வதற்காக அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

சோதனைச் சாவடிகளில் ஏற்றி இறக்கும் கூலி உட்பட சகல செலவுகளையும் உள்ளடக்கியதாக ஒவ்வொரு பொருள்களுக்கும் 01 தொண்ணுக்கு அறவிடப்படுகின்ற தொகையைக் குறிப்பிட்ட விலை மனுக்களை 2002.11.07 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க அல்லது குறித்த டென்டர் பெட்டியில் இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "யாழ்ப்பாணத்திற்கான கொண்டுசெல்லல் கட்டணம்" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு கீழே குறிப்பிடப்படுபவருடன் தொடர்பு கொள்ளவும். (தொ.பே.: 449538)

பொது முகாமையாளர்,
வ/ப கட்டடப்பொருள்கள் கூட்டுத்தாபனம்,
541, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு - 12
தொலைபேசி: 326701- 2/ பெக்ஸ்: 445614
ஈமெயில்: bmcltd@ sltnet.lk.

(C/24406)

# முஸ்லிம்களுக்கு சமத்துவம் தனித்துவமும் பேணப்படும்!

## பிரதமர் உறுதி; இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில்

கொழும்பு,ஒக்.26

முஸ்லிம்களின் தனித்துவம், கலாசாரம் ஆகியவை பேணிப் பாதுகாக்கப்படும். ஏனைய சமூகத்தவர்களுக்கு வழங்கப்படும் சகல உரிமைகளும், சலுகைகளும் முஸ்லிம் மக்களுக்கும் வழங்கப்படும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பகிரங்கமாக அறிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மூன்று நாள்களாக நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் நேற்றைய நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இஸ்லாத்தின் அருமையையும், தமிழின் பெருமையையும் பிரதமர் கூறி புளகாங்கிதம் அடைந்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

உலகில் பலகோடி மக்கள் அனுஷ்டிக்கும் சமயங்களில் இஸ்லாமும் ஒன்று. இஸ்லாமிய போதனை எந்த மனிதனையும் நல்வழிப்படுத்தக்கூடியது. அது ஒரு வாழ்க்கைநெறி. இஸ்லாம் உலகளாவிய ரீதியில் இன்று வளர்ச்சி கண்டிருக்கிறது. அதற்குத் தமிழ்மொழியும் பெருமளவில் உதவியிருக்கிறது. தமிழ்மொழி இஸ்லாத்தைவிட எவ்வளவோ மூத்தது.

இலக்கியங்கள், காவியங்கள், புராணங்கள் ஆகியவைமூலம் இந்து மதத்தை தமிழ்மொழி வளர்த்தது. அதேபோன்று இஸ்லாமிய மதத்தை மட்டுமல்ல பௌத்த மதத்தையும் தமிழ்மொழி வளர்த்துள்ளது.

குறிப்பாக தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், இந்துக்களுக்கு மட்டும் உரித்துடையது அல்ல. பௌத்த வழிபாட்டுதலங்களும் அங்கே உள்ளன. பௌத்தர்களுக்கும் அங்கே உரிமை உண்டு.

அதேபோன்று எமது நாட்டில் உள்ள அனுராதபுரத்திலும் தமிழ் இராசதானிகளும், இந்து ஆலயங்களும் இருக்கின்றன. அனுராதபுரமும் இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் உரித்தானதாகும்

இந்தியாவிலும் கிரேக்கத்திலும் இருந்து வந்த இஸ்லாமியர்கள் இங்கு வர்த்தக நடவடிக்கைகளிலேயே ஆர்வம் கொண்டிருந்தனர். இதனால் கல்வியில் அவர்கள் அக்கறை காட்டவில்லை.

அதேவேளை, தமிழர்களும், சிங்களவர்களும் ஆங்கிலக் கல்வியை கற்கத் தலைப்பட்டனர். கல்வியில் முன்னேற்றம் அடைந்தனர்.

எனினும் டாக்டர் ஜயா, டாக்டர் கலீல் போன்றவர்கள் இங்கு முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டனர். அதன்மூலம் இன்று முஸ்லிம்கள் பிரமிக்கத்தக்க விதத்தில் கல்வியில் வளர்ச்சி அடைந்துள்ளனர். இது மகிழ்ச்சிக்குரிய விடயம். டாக்டர் ஜயா போன்ற முஸ்லிம் தலைவர்கள் கல்வித்துறையில் மட்டுமன்றி, அரசியல் துறையிலும் சிறந்த பணியாற்றியவர்கள், நாட்டின் சுதந்திரத்துக்காக முன்னணியில் நின்று போராடியவர்கள். அவர்களின் வழியைப் பின்பற்றி முஸ்லிம்கள் நாட்டின் அரசியலில் அரும்பணியாற்றி வருகிறார்கள்.

இன்று சர்வதேச மட்டத்தில் அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டை இங்கு நடத்துகின்றோம். இதனால் நாம் பெருமையடைகின்றோம். இந்த மாநாட்டை இவ்வளவு சிறப்பாக நடத்துவதற்கு பெரும் துணைபுரிந்த அமைச்சர் ரவூப ஹக்கீம் பாராட்டப்படவேண்டியவர். அமைச்சர் அஸ்வரும் பாராட்டுக்குரியவர்.

இங்கு இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லிம்கள் எல்லோரும் இணைந்து வாழ்கின்றோம். எந்த ஓர் இனத்தவரும் அஞ்சத்தேவையில்லை. எல்லோரும் சமம் - என்றார் பிரதமர்.

இவ்வைபவத்தில் இலங்கை, இந்தியா, மலேசியா நாடுகளைச் சேர்ந்த புரவலர்களும், கல்விமான்களும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

(ம)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு பாடசாலை அழகரட்ணம் மண்டபத்தில் அதிபர் அ.மு. அருணாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.26

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

(எ-5)

## பயணிகள் சிரமம்

கொடிகாமம்,ஒக்.26

மழைகாலம் ஆரம்பமாகியதை அடுத்து கொடிகாமம் பஸ் நிலையத்தில் மாணவர்கள், பொதுமக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

பஸ்நிலையத்தின் கூரைகள் சேதமடைந்துள்ளமையே மழை வெள்ளம் தேங்கவும், பொதுமக்கள் கஷ்டங்களை அனுபவிக்கவும் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பஸ்நிலையத்தில் பாரியகுழி ஒன்றும் காணப்படுகின்றது. இதில் நீர் தேங்கியுள்ளது.

இது குறித்து கொடிகாமம் வணிகர் மன்றம் பிரதேச சபைக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. அதில், கொடிகாமம் பஸ்தரிப்பு நிலையம் நூற்றுக்கணக்கான பொதுமக்களும் பாடசாலைப் பிள்ளைகளும் தரித்து நின்று சாவகச்சேரி, யாழ்ப்பாணம், முகமாலை, பருத்தித்துறை போன்ற இடங்களுக்கு பிரயாணம் செய்வதற்கு பயன்படுவதாகும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது (எ-74)

## மெய்வன்மைப் போட்டி ஒத்திவைப்பு

யாழ்.மாவட்ட மெய்வன்மைப் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தப்போட்டிகள் அடுத்த மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் இடம்பெறவிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## மிருசுவிலில் மண்அணைகள் அகற்றப்படுகின்றன

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் பொதுமக்கள் மீளக்குடியமர்ந்து வருவதற்கு வசதியாக இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மண் அணைகள் படையினரால் அகற்றப்பட்டு வருவதாக அப்பகுதிக் கிராம அலுவலர் தெரிவித்தார். (எ-117)

## அல்லாரைப் பகுதியில் 5அடி முதலை சிக்கியது!

ஆட்டுக்குட்டியைப் பிடித்த முதலையை பொதுமக்கள் துரத்திச் சென்று பிடித்த சம்பவம் கடந்த செவ்வாயன்று மாலை அல்லாரையில் இடம்பெற்றது.

ஐந்து அடி நீளமான இந்த முதலை பொதுமக்களின் பார்வைக்காக சந்திகளில் வைக்கப்பட்டு பின்னர் அடித்துக்கொல்லப்பட்டது. (எ-117)

## போலி டொலர்கள்மூலம் பணம் சுருட்டிய கெமரூன் வாசிகள் நீர்கொழும்பில் கைது!

கொழும்பு,ஒக்.26

போலி அமெரிக்க டொலர் நோட்டுக்களை மாற்றி பல லட்சக்கணக்கான ரூபா பணம்பெற்றுக்கொண்ட கெமரூன் நாட்டைச் சேர்ந்த ஐவர் நீர்கொழும்பில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த புதனன்று நீர்கொழும்புப் பகுதியில் கொழும்பு கோட்டைப் பொலீஸாரும் நீர்கொழும்பு பொலீஸாரும் இணைந்து நடத்திய வேட்டையிலேயே இவர்கள் கைதானார்கள்.

அவர்களிடமிருந்து பல டொலர் நோட்டுக்களும், போலி நோட்டுக்களும், நோட்டுக்களின் நிறத்தை மாற்றும் திரவப் போத்தல்களும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன.

நீர்கொழும்பின் பல பகுதிகளில் இவர்கள் போலி டொலர் நோட்டுக்களைக் கொடுத்து இலங்கைப் பணத்தைப் பெற்றிருந்தனர் எனத் தெரிய வந்திருக்கிறது. இவர்களிடம் ஏமாந்தவர்கள் பொலீஸில் முறைப்பாடு செய்யவில்லை.

இதற்கிடையில், ஆயிரம் ரூபா கள்ளநோட்டுக்கள் அச்சடித்து வந்த முக்கிய சந்தேக நபர் உட்பட ஆறு பேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

கல்கிரியாகம பொலீஸாரால் கைது செய்யப்பட்ட நால்வரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின்பேரில் முக்கிய சந்தேக நபர் கிரிபத்கொடையில் வைத்து கைதுசெய்யப்பட்டார். கள்ள நோட்டுக்களை அச்சடிக்கும் அச்சுக்கூடமும் கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களால் வழங்கப்பட்ட சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான போலி நோட்டுக்கள் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. (ம)

## 'கிபிர்' விபத்து பற்றி விசாரிக்க இஸ்ரேலில் இருந்து குழு வந்தது

கொழும்பு,ஒக்.26

குளியாப்பிட்டியில் 'கிபிர்' விமானம் வீழ்ந்து நொறுங்கிய விபத்துக் குறித்து நேரில் ஆராய இஸ்ரேல் நிபுணர் குழு ஒன்று நேற்றுமுன்தினம் இலங்கை வந்தது.

விமானம் வீழ்ந்து நொறுங்கியதற்கு விமானத்தின் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே காரணம் என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதையடுத்து விமானம் வீழ்ந்ததற்கான முழு விவரத்தையும் கண்டறியவே இஸ்ரேல் நிபுணர் குழு வந்துள்ளதாக விமானப் படைத் தளபதி தெரிவித்துள்ளார். (ம-3-12)

## தூத்துக்குடியில் கைதுசெய்யப்பட்ட 4இலங்கை மீனவர்கள் விடுதலை!

சென்னை.ஒக்.26

தூத்துக்குடி கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது இந்திய கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கையைச் சேர்ந்த கிருஸ்துவராஜ் என்பவருக்குச் சொந்தமான படகில் 5இலங்கை மீனவர்கள் இந்தியக் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது தூத்துக்குடியில் உள்ள இந்திய கடலோரக் காவல் படையினரால் ஓகஸ்ட் 8ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர்.

தெர்மல்நகர் பொலீஸார் இவர்கள் மீது வழக்குப் பதிவுசெய்து நீதிமன்றில் ஆஜர்செய்தனர். இலங்கையைச் சேர்ந்த கிறிஸ்தோபர், சுனில் சாந்தா, நெவில், நிஷாந்த், சரத் பெரேரா ஆகிய 5 பேரையும் மதுரை சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். இந்நிலையில் கிறிஸ்தோபரைத் தவிர மற்ற 4 மீனவர்களையும் இராமநாதபுரம் நீதிமன்று விடுதலை செய்தது. இந்த4 மீனவர்களும் நேற்று இலங்கைக்குவர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மற்றொரு மீனவரான கிறிஸ்தோபரும் அவரது படகும் விடுவிக்கப்படவில்லை. (ம)

## பளைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர்.உதவி

தென்மராட்சி,ஒக்.26

பளைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினர் உணவுப்பண்டம் அல்லாத பொருள்களை வழங்கிவருகின்றனர்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் படுக்கை விரிப்புகள், சாறிகள், சாரங்கள், துவாய்கள், சீத்தைத் துணிகள், பிளாஸ்ரிக் வாளிகள், கோப்பைகள் மற்றும் கூடார விரிப்புகள் ஆகியவற்றை வழங்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - முகாவில் கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு யாழ்.வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தினர் உலர் உணவுப் பொருள்கள், உடுபுடைவைகள் ஆகியவற்றைக் கடந்த வாரம் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## கிழக்கு மக்களுக்கு சரியான தலைவர் அஷ்ரப்பின் பின்னர் உருவாகவில்லை

### நூல் வெளியீட்டு விழாவில் ஜனாதிபதி உரை

கொழும்பு.ஒக்.26

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் மறைவுக்குப்பின், கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களால் சரியான ஒரு தலைவரை இன்னமும் தெரிவுசெய்யமுடியாதிருக்கிறது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறினார்.

அமரர் அஷ்ரப்பின் 54ஆவது பிறந்ததினமான கடந்த புதனன்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் ஜனாதிபதி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அஷ்ரப் தமிழில் எழுதிய 'நான் எனும் நீ' என்ற நூல் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

ஜனாதிபதி அங்கு மேலும் பேசியதாவது:-

துப்பாக்கிகள், குண்டுகள் ஏந்தாமல் ஜனநாயக வழியில் கிழக்கு முஸ்லிம் மக்களுக்காக அஷ்ரப் போராடினார். அவ்வாறு அவர் போராடியிருக்காவிடின் பிரபாகரனை விட பயங்கரமான ஒருவர் கிழக்கு மாகாணத்தில் உருவாகி அப்பிரதேசத்தை கட்டுப்படுத்தியிருக்கலாம்.

குறுகிய நோக்கங்கள், பதவி பேராசை போன்றவை இல்லாத - தலைவர்களே இன்று நாட்டுக்குத் தேவை. இவ்வாறான ஒரு காலகட்டத்தில் அவரது மறைவு பேரிழப்பு.

இன்றைய அரசியல் நடவடிக்கைகளில் கிழக்கு மாகாண மக்கள் மிகத்துர்ப்பாக்கியமான நிலைக்கு உள்ளாகியுள்ளனர். அந்த நிலையைப்போக்க சகல சிங்கள, முஸ்லிம், , தமிழ்த் தலைவர்களுக்கும் தைரியம்கிட்டவேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்.

-இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

(ம)





இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வேலணை பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வதிவிடச் செயலமர்வு ஒன்று அண்மையில் கரம்பொன் சண்முகநாதா மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

செயலமர்வின் முதலாம் நாள் நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலர் செ.இரத்தினம் சிறப்புரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும்- செயலமர்வில் கலந்துகொண்ட ஆசிரியர்களை இரண்டாவது படத்திலும் காணலாம். செயலமர்வின் தலைவரும், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபருமான ஜே.எக்ஸ்.செல்வநாயகம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, சைவ சித்தாந்த பண்டிதர் முன்னாள் அதிபர் மு.திருஞானசம்பந்தபிள்ளை, வேலணை கலாசார உத்தியோகத்தர் அ.சிவஞானசீலன் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர். (எ)

# அரசாங்க அறிவித்தல்

## தேருநர் பதிவேடுகள் திருத்தம் - 2002

1. 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 12 (1)ஆம் பிரிவின்படி 2002ஆம் ஆண்டுக்குரிய தேருநர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டது என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.
2. தற்சமயம் நடைமுறையிலிருக்கும் 2001ஆம் ஆண்டுக்குரிய தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள். |
|---|---|
| 2.1. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | அரசாங்க அதிபர் அம்மாவட்டத்திற்குப் பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான தேருநர் பதிவேட்டுப் பிரதி. |
| 2.2. பிரதேச. செயலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள தேருநர் பெயர்களடங்கிய பதிவேட்டின் பாகங்கள். |

3. ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் தேருநர் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்திலுள்ள தேருநர் பதிவேட்டை அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பாகத்தைப் பரிசீலனை செய்வதன்மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.
4. தேருநர் பதிவேட்டை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ் விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும் 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ஒவ்வொருவரும் அதில் தமது பெயரைக் கீழ்க்காணும் முறையில் இடுவித்துக்கொள்ளலாம்.
   - 4.1. இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டிருக்கும் இணைப்படிவத்தில் 2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொருத்தமான தேர்தல் மாவட்டத்தின் பதியும் அலுவலருக்கு தங்கள் பகுதிக் கிராம அலுவலருக்கூடாக எழுத்துமூலம் ஒரு விண்ணப்பத்தினைச் செய்யலாம். இதற்கான விண்ணப்பப்பத்திரத்தை உங்கள் பிரிவுக் கிராம அலுவலரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
   - 4.2. பதியப்படுவதற்கான தகைமைபற்றி எல்லாத் தகவல்களையும் கிராம அலுவலரினால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேட பத்திரம் எதிலும் கொடுத்தும், கிராம அலுவலரினால் கேட்கப்படும் ஏனைய விவரங்களைக் கொடுத்தும் இவ்விண்ணப்பப்பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம அலுவலரின் அலுவலகத்தில் கையளிக்கவும்.
5. உங்களினால் கையளிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம அலுவலர் தனது சிபார்சுடன் பதிவு அலுவலருக்கு அனுப்பிவைப்பார்.

**செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**2002 ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி.**

**பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல.10-யாழ்ப்பாணம்.**

## ஒரு தேருநராகப் பதிவதற்கான விண்ணப்ப படிவம் - 2002

ஜே/ ........................ பிரிவு கிராம உத்தியோகத்தர் ஊடாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட பதியும் அலுவலருக்கு,

குறிப்பு:-
ஆளொருவரின் பெயரைத் தேருநர் இடாப்பில் பதிவதற்கென அந்த ஆளாலேயே செய்யப்படும் விண்ணப்பம் தொடர்பாக இவ்விண்ணப்பப்படிவத்தில் பகுதி 1 மட்டும் பூர்த்திசெய்தல் போதுமானது. ஆளொருவரின் பெயரைத் தேருநர் இடாப்பில் பதிவதற்கு அவரின் சார்பில் வேறு எவரேனும் ஆளால் செய்யப்படும் விண்ணப்பம் தொடர்பாக இவ்விண்ணப்பப்படிவத்தில் பகுதி 1 உம், பகுதி 11 உம் பூர்த்தி செய்யப்படல்வேண்டும்.

### பகுதி I

★ பொருத்தமற்றதை வெட்டி விடவும்.

........................................ யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எனது பெயரை ஒரு தேருநராகப் பதிவதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.
★/எனதுநெருங்கிய உறவினரொருவரைக் / எனது வீட்டில் குடியிருக்கும் ஒருவரை ஒரு தேருநராக பதிவதற்கு அவரின் சார்பில் விண்ணப்பிக்கிறேன்.

0.2. எனது விண்ணப்பத்தின் சார்பில் கீழ்க்காணும் விவரங்கள் தரப்பட்டுள்ளன.
2.1. முழுப்பெயர்:- ........................................
2.2. விலாசம்:- ........................................
........................................
2.3. பிறந்த திகதியும் வயதும்:- ........................................
(01.06.1984ஆம் திகதியும் அதற்கு முன்னர் பிறந்தவர்களும் பதிவுசெய்யத் தகுதியுடையவர்கள் என்பதை கருத்திற்கொள்ளவும்.
2.4. நீங்கள் இவ்வீட்டின் பிரதான குடியிருப்பாளரா?:- ........................
2.5. பிரதான குடியிருப்பாளருடனான உறவுமுறை:- ........................
2.6. 2002.06.01ஆம் திகதி மேற்குறிப்பிட்ட விலாசத்தில் சாதாரண குடியிருப்பாளரா?:- ............
2.7. பால்:- ........................ இனம்:- ........................
2.8. பதிவுமூலம் இலங்கைப் பிரஜையாயின் பிரஜாவுரிமைப் பத்திர இலக்கத்தினைக் குறிப்பிடுக:-
........................................
0.3. தேசிய அல்லது விசேட அடையாள அட்டை இலக்கம்:- ........................
........................................

திகதி:- விண்ணப்பதாரியின் கையொப்பம்

### பகுதி II

வேறு ஆளின் சார்பாக விண்ணப்பம் சமர்ப்பிப்பதாயின் வேறு ஆள் தொடர்பான விவரங்களைக் கீழே தரவும்.
அ. எவர் சார்பாக விண்ணப்பிக்கப்படுகின்றதோ அவரின்
முழுப்பெயர்:- ........................................
விலாசம்:- ........................................
........................................
ஆ. அவரின் தேசிய அல்லது விசேட அடையாள அட்டை இலக்கம்:- ........................
........................................
இ. அவர் பிரதான குடியிருப்பாளரா?:- ........................
ஈ. அவருக்கும் எனக்கும் உள்ள உறவுமுறை:- ........................
உ. அவருடைய தொழிலும் தற்போதைய விலாசமும்:- ........................
........................................
ஊ. அவரின் பிறந்த திகதியும் தேசிய இனமும்:- ........................
........................................

மேலேயுள்ள விவரங்கள் எல்லாவகையிலும் உண்மையானது எனவும் எந்த ஆள் சார்பில் இவ்விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்த ஆள் மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் ஒருவராகப் பதிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடையவர் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

........................................
திகதி:- விண்ணப்பதாரியின் கையொப்பம்

### பகுதி III

**கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்**

1. தேர்தல் மாவட்டம்: இல.10 - யாழ்ப்பாணம்
2. வாக்கெடுப்புப் பிரிவு:-
3. வாக்கெடுப்பு மாவட்ட இல.:-
4. கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும்:-
5. கிராமம் / வீதியின் பெயர்:-
6. வீட்டு இல.:-
7. 2001ஆம் ஆண்டு பதிவேட்டின்படி இப்பெயர் பதியப்படவேண்டிய பக்க இலக்கம்:-
(உதாரணம்: அ / 16 / 14)
8. மேற்காட்டப்பட்ட ........................ என்பவர் தேருநராகப் பதிவதற்கு தகுதியுடையவர். இவரின் பிறந்த திகதி ........................ ஆகும். இத்திகதி என்னால் பரிசீலிக்கப்பட்டது.

கிராம உத்தியோகத்தரின் கையொப்பம்
பதவி முத்திரை
திகதி

(C/24386)

# பரீட்சை நிலையம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

வடக்கு - கிழக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தின் வெளிகளப் போதனாசிரியர் பதவிக்கு ஆள்ச் சேர்ப்பதற்காக இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைய விருந்த பரீட்சை நிலையம் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரியில் அமைய விருந்த பரீட்சை நிலையமே இவ்வாறு மாற்றப்படுவதாக முன்னர் வெளிவந்த தகவல்களில் உண்மை இல்லை என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## வெள்ளிவிழா வாழ்த்து

**இன்று சனிக்கிழமை (26.10.2002)**
**வெள்ளிவிழாக் காணும்**
**அருட் திரு.பொனிபஸ் அடிகளாருக்கு**



ஆற்றல் நிறை அருளுரையில்
அளவுகோலாகி நின்று
போற்றுகின்ற மாமறையின்
பொன் விளக்காய் துலங்கிடும்மெம்
பக்தர் குலப் பணிக்கரமே!
பூத்த புகழ் பொனிபஸ் அடிகளாரே!
தன்னலம் சிறிதும் தன்னகமில்லாது
கரம் கொடுத்துக் காத்த கரம்பொன் தாய் சேயோனே!
வேத நெறிக் காவலனே! வெள்ளிவிழா நாயகனே!
சித்தி தரும் சீரிய கலையின் செம்மலரே!
நற் பணி காத்த நல்லாளனே!
பொற்பணியின் பொக்கிஷமே!
சொற் பொழிவின் சொல்லோனே - உம்
ஏற்றமுறு பணியுயர வேண்டுமென
வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

*183, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

திரு.திருமதி ஜெகநாதன்
குடும்பத்தினர்.

(9883)

ஓம் சாயி ராம்

## ஆரம்ப விழா

**சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்விப் பாடசாலை**

சோதிவேம்படி வீதி, மானிப்பாயில் 28.10.2002 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுகின்றது.

பிரதம விருந்தினர் : **ஸ்ரீ.எஸ்.சிவராஜா**
*(முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ். மாவட்டம்)*
சிறப்பு விருந்தினர் : **கௌரவ K.B.கோகுலசந்திரன்**
*(தூதுவ் ஆலோசகர் - இந்தியஉயர்ஸ்தானிகராலயம் - இலங்கை)*
**ஸ்ரீ.இ.த.விக்னராஜா**
*(மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)*

### நிகழ்ச்சிகள்

காலை
9.00 - விருந்தினர்கள் வரவேற்பு
**விருந்தினர் வருகையும், கௌரவிப்பும்**
9.15 - வரவேற்பு நடனம்
**பாலவியாசர் பாடசாலைச் சிறுவர்கள்**
9.20 - பிராந்திய நிலைய கொடியேற்றல்
**ஸ்ரீ.S.சிவஞானம்**
*ஆலோசகர், சாயி நிலையம் - இலங்கை*
9.30 - **மானிப்பாயில் மீள நிறுவப்பட்ட புதியசாயி நிலையத்தைத் திறந்துவைத்தல்**
**ஸ்ரீ.M.வண்ணியசேகரம்**
*(மத்திய இணைப்பாளர், சாயி நிலையம் - இலங்கை)*

அதனைத் தொடர்ந்து உரைகளும்
கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

**ஸ்ரீசாயி சத்தியசேவா இணைப்புக்குழு,**
இல.166/5, சேர்பொன்.இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(C/24407)

## முதலாம் வருட நினைவஞ்சலி



அமரர்
செல்லத்துரை விஜயரத்தினம்
*(உரிமையாளர், மதன் ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி)*

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 11-05-1943 | 05-11-2001 |

அன்பான அப்பா! எங்கள் அன்புத் தெய்வமே!
எங்கு மறைந்தீர்களோ? ஒளிவிளக்காய் வழிகாட்ட
வேண்டிய நேரத்திலே எம்மைத் துடிதுடிக்கவிட்டு
மறைந்து போனீர்களே!
தவிக்கின்றோம் நாம்.

*சந்தை வீதி, இமையாணன்,*
*உடுப்பிட்டி.*

**அன்பு மனைவி,**
**பிள்ளைகள்.**

(9831)

| | | | |
|---|---|---|---|
| | | சனி ரா. | |
| | இராசிச் சக்கரம் | | வியா. |
| | | | |
| | கேது | சூரி. புத. வெள். | செவ். |

**மாற்றம்:**

27.10.2002 திருவாதிரை. மிதுன இராசியில் சந்திரன் இருக்கும்.

அரசியலில் கருத்துவேற்றுமை, திடீர்மாற்றம் கொடுகக இடம் உண்டு. தெற்கே போட்டிகள் வர இடம் உண்டு. அரசியலில் ஓர் இடைக் காலத் தளம்பல் நிலை உருவாகலாம். யார் முதுகில் யார் குத்துவார்கள்? ஆனால், சமாதானப் பேச்சுத் தொடரும்.

இந்தியாவின் தலையீடு இருக்கும். இந்தியாவில் மத்திய அரசு திட்டமிட்டு தெற்கு அரசியலில் செல்வாக்குத் தேடும். அதனால் பதற்ற நிலை ஏற்படும். வடக்கில் புதிய தீவிரவாதச் சிந்தனைகளால் தொல்லைகள் வரும். மேற்கு உலகம் மத்திய கிழக்கு நாடுகளில், ஈராக், ஈரான், பலஸ்தீனத்தில் தீவிரச் செயற்பாடுகளைச் செய்யும். பசுபிக், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் மழை, காற்று அழிவுகளைக் கொடுக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

# இந்த வார இராசி பலன்

## 27.10.2002 ~ 02.11.2002

### மேடம்

உணர்வுகளைக் கண்டபடி மனித மனங்களில் ஏற்றவோ, இறக்கவோ முடியாது. தொழில் ஸ்தானத்தில் சிலர் உங்கள் மனம் நோகச் செய்வார்கள். பிறருக்கு ஆலோசனை, இடமாற்றம், அடிக்கடி கோபம், தாய் வழியினருடன் கருத்துவேற்றுமை, பதற்றநிலை, பொருள்வரவு என்பன நடக்கும். உஷ்ணபீடைகள், பித்த ரோகம் என்பனவரும். எண்ணெய்த் துறை, கோயில்துறை, மருந்துத் துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன், வெள்ளி.*

### இடபம்

ஊருக்காக எத்தனையோ தியாகங்களைச் செய்கின்றார்கள்; உங்கள் தியாகங்களால், உங்கள் தொழில் ஸ்தானத்தில் நீங்கள் செய்கின்ற தியாகங்களால் பலர் உங்களை வாழ்த்துவார்கள். மாணவர்களுக்கு நன்மை ஏற்படும். நண்பர்கள் உதவுவார்கள். தூரத்துச் செய்திகள் வரும். உண்மைக்காக போராடுதல், வீடு, வாகன வசதிகள் வரும். எதிர்ப்பாளர் உதவுவார்கள். நெஞ்சு வருத்தம், வாய்வுத்தொல்லை என்பன வரும். ரி.வீ. துறை, அரசியல் துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி.*

### மிதுனம்

மனதில் பிடித்தவர் மதத்தால் மாறியிருந்தால் குடும்பவாழ்வில் சந்தோஷம் இருக்காதா? எல்லாவற்றுக்கும் மனந்தான் காரணம். படபடப்பு, பிடிவாதம், பொருள் இழப்பு ஏற்படும். புதிய நண்பர்கள் உதவி செய்வர். மாணவர்கள் சித்தி அடைவார்கள். நாரிப் பிடிப்பு, தலைப்பாரம் ஏற்படும். செய்தித் துறை, கமிஷன்துறை, வியாபாரத் துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன, வெள்ளி.*

### கடகம்

சட்டதிட்டம் போட்டு மனித மனங்களை மதம், ஜாதியை இலேசில் மாற்றமுடியாதா? மாற்றக்கூடியவர்கள் உங்கள் தொழில் ஸ்தானத்தில் இருப்பார்கள். அவர்களை அடிக்கடி நிதானித்தபடி இருப்பீர்கள். எதிர்ப்பாளருடன் போட்டி ஏற்படும். புடைவை, நகை சேரும். குடும்பத்தில் சச்சரவு, வாகனச்செலவு அதிகரிக்கும். விவசாயத்துறை, பாதுகாப்புத்துறை, அரசியல்துறை, மின்சாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி.*

### சிங்கம்

மனித மனங்களில் அடிக்கடி மாற்றம் இல்லாவிட்டால், இரவு, பகல் இல்லாவிட்டால், ஓய்வு இல்லாவிட்டால் வெறுப்பே ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் சலிப்பு வரும். பொருள் வரவு ஏற்படும். ஆனால், கொடுக்கல், வாங்கலில் பதற்றநிலை வரும். இடமாற்றங்கள் கொடுக்கும். நெஞ்சுச்சளி ஏற்படும். குருத்துறை, பிரயாணத்துறை போன்ற துறையினர் முன்னேற்றம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன, வெள்ளி.*

### கன்னி

அறிவுப் போட்டி, அரசியல் போட்டி, அதிகாரப் போட்டி உலகமே போட்டிமயம். உங்கள் தொழில் ஸ்தானத்திலும் போட்டிகள் உருவாகும். புதியவர்கள் வருவர். பணவரவு ஏற்படும். அபிப்பிராயப்பேதம் வரும். புதிய உருவாக்கங்கள் உருவாகும். சளித் தொல்லை, நெஞ்சுப் படபடப்பு வரும். அஞ்சல்துறை, பிரயாணத்துறை, விவசாயத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவர்கள். மாணவர்களுக்குப் புதிய மாற்றங்கள், பணவரவு என்பன கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன், வெள்ளி.*

### துலாம்

பல்கலைக்கழகங்களில் உள்ள துறையினர்களில் அதிஉயர் பீடத்தவர்கள் தங்களைப் போன்று எத்தனை பேரை தகுதிவாய்ந்தவர்களை உருவாக்குகின்றார்கள்? மக்கள் இதைச் சிந்திக்கிறார்கள். தொழில் ஸ்தானத்தில் புதியவர்களை உருவாக்குபவர்கள் பற்றிய சிந்தனை மேலிடும். மாற்றங்கள், வருமானம் பற்றிய சிந்தனை, இனஜனத்தவர்களின் உடல்நிலைப் பாதிப்பு, செலவுகள் அதிகரிப்பு, உடல்களைப்பு, கால் வருததங்கள் என்பனவரும். மாணவருக்கு நன்மைகள் அதிகரிக்கும் சட்டத்துறை, அரசியல்துறை, வாகனத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

உங்களைப் பற்றிய சிந்தனை யாருக்கு? நீங்கள் உதவி கேட்டால் எட்டி உதைக்கும் உலகைப் பற்றி நீங்கள் அதிகம் சிந்திக்கின்றீர்களா? தொழில் ஸ்தானத்தில் இப்படி உங்களைச் சிலர் உதாசீனம் செய்வார்கள. நீதிக்காக உங்கள் குரல் பலத்து ஒலிக்கும். அடிக்கடி கோபம், பொருள் இழப்பு, அரச உதவி, எதிரிகள் பதுங்குவர். கடன் சுமை, வீட்டில் கருத்து வேற்றுமை, மாணவர்களுக்குப் பரீட்சை சித்திகள், வயிற்றுநோ, தொண்டை நோ என்பன ஏற்படும். குருத்துறை, வங்கித்துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வெள்ளி.*

### தனுசு

பல்கலைக்கழகத்தின் பரீட்சைப் பெறுபேற்றை பல்கலைக்கழக மாணவர்கள் திருப்பிப் பார்க்கமுடியாதா? O/Lஇல், A/Lஇல் திருப்பிப்பார்க்க முடியும். இங்கு பார்க்க மாணவர்களுக்கு உரிமையில்லையா? இதைச் சட்டபீடங்களை அமைக்கும் சட்டவாதிகள், பல்கலைக்கழக பீடாதிபதிகள் ஏன் சிந்திக்கக்கூடாது? எத்தனை பேர் அப்... அப்பீல் கோடு எனப் போகமுடியும்? என்பதை அறிஞர்கள், அரசியல்வாதிகள் ஏன் சிந்திக்கக்கூடாது? படபடப்பு, பணத் தொல்லை, தொழில்நிலை மாற்றம், புதிய திட்டச்சிந்தனை என்பனவரும். வயிற்றுநோ, கால் வருத்தம் வரும். பிரயாணத்துறை, குருத்துறை, செய்தித்துறையினர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி.*

### மகரம்

அரசியல் ஒரு விளையாட்டு என எண்ணுகிறீர்களா? நண்பர்கள் எதிரிகள் ஆகலாம். எதிரிகள் நண்பர்கள் ஆகலாம். தொழில் ஸ்தானத்திலும் மாற்றங்கள் ஏற்படும். வீடு, வாகன வசதிகள், இடமாற்றங்கள், பொருளால் யோசனை என்பன கொடுக்கும். கால் வருத்தம், நாரி உளைவு, சளித்தொல்லை என்பன ஏற்படும். மாணவர்கள் நன்மை அடைவார்கள். மருந்துவேலை, குருத்துறை, கடை வேலை போன்ற வேலைகளால் மாற்றம், வேதனை கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், வியாழன்.*

### கும்பம்

மனித வாழ்வு ஆசை நிறைந்தது. ஆசை பெருக துன்பம் பெருகும். துன்ப வாழ்வை யார் தேடுவது? நாம்தான் தேடுகின்றோம். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் மனத்துன்பத்தைக் கொடுக்கும். தூரத்துச் செய்திகள், பணக் கஷ்டம், இடமாற்றங்கள் வரும். வரவுக்கு மீறிய செலவுகள் கொடுக்கும். கால் வருத்தம், சளி, காய்ச்சல், உஷ்ணபீடைகள் கொடுக்கும். மாணவர்களுக்கு பரீட்சையில் சித்திகள் கொடுக்கும். குருத்துறை, அரசியல்துறை, பிரயாணத் துறை போன்றோர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், வியாழன்.*

### மீனம்

உலகில் எந்த விஷயத்திலும் போட்டிகள் உருவாகியபடிதான் இருக்கும். அதையும் மீறித்தான் நாம் செயற்படவேண்டியிருக்கின்றது. தொழில் பீடத்தில் கொடுக்கல், வாங்கலால் போட்டிகள் ஏற்படும். நண்பர்கள் உதவி செய்வார்கள். எதிர்ப்பாளர்களுடன் அவதானமாக இருக்கவும். தூரதேசப் பிரயாணங்கள் அல்லது செய்திகள் சிலருக்கு வரும். நரம்புச் சோர்வு, சளி, குடல் வருத்தங்கள் கொடுக்கலாம். பிரயாணத்துறை, வியாபாரத்துறை, தோட்டத்துறை, மருத்துவத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், வியாழன்.*

**மகாதேவா ஜோதிடம்**

---

# நாடாளுமன்றத்தைக் கலைக்கமாட்டேன் என்று எந்த ஜனாதிபதியாவது உத்தரவாதம் தந்தாரா?

## அக்காவுக்கு புகழ்பாடுகிறார் அனுரா எம்.பி.

கொழும்பு,ஒக்.26

இந்த நாட்டை ஆட்சிசெய்த எந்த ஜனாதிபதியும் நாடாளுமன்றத்தைக் கலைக்கமாட்டேன் என்ற உத்தரவாதத்தை வழங்கவில்லை. சகல அதிகாரங்களும் தனது கையிலிருந்தும் கூட, நாட்டின் நலன்கருதி ஆட்சியைக கலைக்கும் நோக்கம் தமக்கில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா முன்கூட்டியே திட்டவட்டமாக அறிவித்தார்.

- இவ்வாறு கூறினார் அனுரா பண்டாரநாயக்க எம்.பி.

நுகேகொடவில் நடந்த புதனன்று அரசுக்கு எதிராக இடம்பெற்ற எதிர்ப்புக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக சரியானதும் நியாயமானதுமான ஒரு தீர்ப்பை வழங்கிய உயர்நீதிமன்றத்துச்கு நன்றி கூறவேண்டும்.

ஜனாதிபதியால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்ட எஸ்.பி.திஸநாயக்கவின் பேச்சை நம்பி - எதிர்க்கட்சி எம்.பிக்கள் தமக்கு ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கையில் - செயற்பட்ட ரணிலுக்கு, அரசியல் வாழ்க்கையில் கிடைத்த பெரும் தோல்விகளில் ஒன்றே உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு.

காமினி திஸாநாயக்கவும் பிரேமதாஸவும் இருந்திருந்தால் ரணில் எதிர்க்கட்சித் தலைவராகவோ அன்றி பிரதமராகவோ வந்திருக்கமுடியாது.

இருந்தாலும் ரணிலின் கடடத்தனமான மூளைக்கு யாரையும் ஒப்பிடமுடியாது. 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அவர் கொண்டு வந்ததன் நோக்கம், ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்பது அல்ல. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிருபித்து அரசமைப்பை முற்றாக மாற்றியமைத்து புலிகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி அவர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காகும்.

தாய்லாந்துப் பேச்சுக்கள் ஒரு போதும் வெற்றியளிக்கப் போவதில்லையென்பது உறுதியாகிவிட்டது.

எமது கட்சியில் இருந்து சென்ற நான்கு கோமாளிகளை வைத்துக் கொண்டு அரசியல் நடத்த ரணில் முயற்சிக்கிறார். அதில் பிரதான கோமாளிதான் ரவி கருணாநாயக்க.

ஜே.ஆர். உருவாக்கிய அரசமைப்பு அவரின் கட்சிக்கு இன்று சாபக்கேடாக அமைந்துள்ளது. அந்த அதிகாரம் ஒரு பெண்ணின் கைக்குப்போகும் என்று அவர் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கமாட்டார் என்றார் அனுரா.

**தினேஸ் குணவர்த்தன**

ஆசை வார்த்தைகளை உவட்டி ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. இன்று ஆடிப்போயுள்ளது. வெளிநாட்டவர்கள் தங்களது பணத்தை இலங்கையில் முதலீடு செய்வார்கள் என்று கூறிய அரசு, இன்று வெளிநாடுகளுக்குச் சென்று 'கண்டியிட்டு' பிச்சை கேட்கும் நிலை உருவாகியுள்ளது. இன்னும் ஒருசில மாதங்களில் நாட்டுமக்களுக்கு முகம்கொடுக்க முடியாதநிலை அரசுக்கு உருவாகும்.

இலங்கைக்கு உலக வங்கி உதவி செய்யப்போவதாகப் பிரசாரம் செய்கிறார்கள். மூன்றாம் உலகநாடுகள் முன்னேறுவதற்கு உலகவங்கி ஒரு போதும் இடமளிக்காது. தனியார் மயப்படுத்தல் என்பது எதிர்கால சந்ததியினரை பாதாளத்திற்கு இட்டுச் செல்வதற்குச் சமமாகும்.

தொழிலாளரின் உரிமைகளை அழித்தொழிக்க அரசு முயற்சிக்கின்றது. இதனால் தொழிலாளர் சமூகம் அரசுக்கு எதிராக வீதிப் போராட்டத்தில் இறங்கியுள்ளது. மறுபுறம் வடக்கில் புளொட், ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புகளை செயற்படவிடாமல் புலிகளுடன் இணைந்து அரசு ஜனநாயகத்திற்கு எதிரான செயல்களில் இறங்கியுள்ளது. இன்று வடக்கில் பாசிசமும், தெற்கில் ஏகாதிபத்தியமும் தலைதூக்கியுள்ளன - என்றார்.

**புத்திரசிகாமணி எம்.பி.**

அரசு மலையக மக்களின் பெரும்பான்மையான வாக்குகளால்தான் ஆட்சிப்பீடம் ஏறியது. ஆனால், அந்த மக்களுக்குள்ள பிரச்சினைகளில் இருந்து பின்வாங்கி வருகிறது. நிம்புப்பேச்சுக்களின்போது மலையக மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படவேண்டும் என்ற நோக்குடன் அவர்களின் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், இன்று தாய்லாந்தில் நடைபெறும் பேச்சுக்களில் மலையகத்தவர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றில் பிரஜாவுரிமை சட்டம் கொண்டு வந்தால் நாம் வாக்களிக்க மாட்டோம் என்று ஆறுமுகம் தொண்டமான் கூறியதற்காக அந்தச் சட்டம் கொண்டு வரப்படமாட்டாது. எனக் கூறப்பட்டது. இன்று ஐ.தே.க வுக்கு எதிராக மலையகத்தில் மக்கள் அணிதிரள்கின்றனர் எனக்கூறினார். (ம)

---

# காஞ்சிரங்குடா முகாமினை உடனடியாக மூடவேண்டும்

## பிரதமரிடம் பொது ஊழியர் முன்னணி கோரிக்கை

காரைதீவு,ஒக்.26

அம்பாறை மாவட்டத்திலுள்ள காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாம் உடனடியாக மூடப்படவேண்டும். அச் சம்பவத்திற்கு உடனடியாக விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின்முன் தண்டிக்கப்படவேண்டும்.

- இவ்வாறு கோரும் மகஜரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அகில இலங்கை பொதுஊழியர் முன்னணியின் தலைவர் எஸ்.லோகநாதன் அனுப்பியுள்ளார்.

அவரது மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

திருக்கோவிலிலும், திருமலையிலும் இடம்பெற்ற அப்பாவிப் பொது மக்கள் மீதான கொலைகளை நாம் கண்டிக்கின்றோம்.

பாதுகாப்புப் படையினர் இரத்த வெறிகொண்டு அலைகின்றனர். ஏற்கனவே உரிமைப் போரில் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

படைகளின் கடிவாளம் தன்னிடமுள்ளதாக சந்திரிகா அம்மையார் கூறுகிறார். ஆனால், மக்களால் தெரிவான மாபெரும் தலைவர் நீங்கள். உங்கள் பகீரத முயற்சியால் புரிந்துணர்வு உடன்பாடு வந்தது. சமாதானம் துளிர்விட ஆரம்பித்துள்ளது; மகிழ்ச்சி.

எனினும், சில படையினர் சமாதானத்தைக் குழப்பும் சதியில் ஈடுபடுவது போன்று தெரிகிறது. அவர்களை அடக்கிவைக்க அரசு முன்வர வேண்டும் - இவ்வாறு கோரப்பட்டுள்ளது. (ம)



மாநாட்டில் கலந்துகொண்டுள்ள அனுரா பண்டாரநாயக்கவும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் ஒன்றாக அமர்ந்திருக்கும் காட்சி. அண்மைக்காலமாக இவர்கள் இருவரிடையேயும் முரண்பாடு நிலவிவந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய போலியோ தடை மருந்து கொடுக்கும் தினம் - 2002

# 2ஆம் சுற்று யாழ்.மாவட்டம்

**போலியோ நோயை முற்றாக இந்நாட்டிலிருந்து ஒழிக்கும் நோக்குடன் கடந்த 7 வருடமாக போலியோ சொட்டுமருந்து கொடுக்கப்பட்டுவருகின்றது. தென்னிலங்கையில் கூடிய முன்னேற்றம் காணப்பட்டபோதிலும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கீழ்க்குறிப்பிட்ட காரணங்களால் இதில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படவில்லை.**

**1. காலத்துக்குக் காலம் மக்கள் இடம்பெயர்வதால் பிள்ளைகளைத் தேடிக் கண்டுபிடித்து மருந்துகொடுப்பதில் உள்ள சிரமம்.**

**2. இடம்பெயர்வு காரணமாக மக்கள் குறிப்பிட்ட இடங்களில் நெரிசலாக வாழ்கின்றபடியால் சுகாதாரத்தைப் பேணுவது குறைவாகக் காணப்படுகின்றது.**

**இக்காரணங்களால் வடக்கு - கிழக்கில் இந்நோய் மறைமுகமாக இருக்கலாம் என ஐயப்பாடு உண்டு. எனவே, இவ்வருடமும் செப்ரெம்பர் 28ஆம் திகதியும் ஒக்ரோபர் 26ஆம் திகதியும் இரு தடவைகள் (05) ஐந்து வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் போலியோ மருந்து கொடுக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.**

**யாழ்.மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கீழ்க்குறிப்பிட்ட நிலையங்களில் போலியோ தடைமருந்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாகாணப் பிரதிப் பணிப்பாளர் - சுகாதார சேவைகள் - மேற்கொண்டுள்ளார். இந்நிலையங்களில் காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை தடைமருந்து வழங்கப்படும். 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு முன்பு பல தடவைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இம்முறையும் கட்டாயமாக இது கொடுக்கப்படவேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. நூற்றுக்கு நூறு வீதமான பிள்ளைகளுக்குத் தடைமருந்து கொடுப்பதன்மூலம் இக்கொடிய நோய் எமது பிள்ளைகளுக்கு வராமல் தடுப்பது மட்டுமல்லாது, எம்நாட்டிலிருந்தே முற்றாக இந்நோயை ஒழித்துவிடவும் முடியும்.**

## சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக சிகிச்சை நிலையங்களின் பெயர்ப்பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### 01. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பழை.

01. மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை
02. சித்தியம்புளியடி சனசமூக நிலையம்
03. பன்னாலை சிகிச்சா நிலையம்
04. குட்டியப் புலம் பாலர் பாடசாலை
05. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மல்லாகம்
06. ஆரம்ப சுகாதார நிலையம், குளமங்கால்
07. சிகிச்சா நிலையம், கல்லாரை
08. ஆரம்ப சுகாதார நிலையம், சீனன்கலட்டி
09. கும்பளை சனசமூக நிலையம்
10. கலைநகர் சனசமூக நிலையம்
11. கிராம சேவையாளர் அலுவலகம், அளவெட்டி மேற்கு
12. மத்திய மருந்தகம் மகப்பேற்றுமனை, அளவெட்டி
13. புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகம்
14. ஆரம்ப சுகாதார நிலையம், ஈவினை
15. மத்திய மருந்தகம், ஏழாலை
16. கிராமோதய நிலையம், ஏழாலை
17. மாதர் சங்கம், ஏழாலை
18. மயிலங்காடு பாலர் பாடசாலை
19. மத்திய மருந்தகம், சுன்னாகம்
20. பொது நூலகம், சுன்னாகம்
21. ஐயனார் சனசமூக நிலையம், சுன்னாகம்
22. சுப்பிரமணியம் சனசமூக நிலையம், சுன்னாகம்
23. மத்திய மருந்தகம், உடுவில்
24. உடுவில் வடக்கு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் அலுவலகம்
25. இந்து இளைஞர் மன்றம் பாலர் பாடசாலை, உடுவில் வடக்கு
26. மல்வம் சேர்ச்
27. ஆரம்ப சுகாதார நிலையம், சங்குவேலி
28. அந்திரான் மாதா கோயிலடி
29. அண்ணா வாசிகசாலை, உடுவில் தெற்கு
30. கந்தர்கோவிலடி, உடுவில் தெற்கு
31. மத்திய மருந்தகம், இணுவில்
32. இணுவில் மத்திய கல்லூரி
33. இராமநாதன் கல்லூரி
34. கலாஜோதி சனசமூக நிலையம்
35. ஆரம்ப சுகாதார நிலையம், தாவடி
36. பாலர் பாடசாலை, காளிகோவிலடி.

### 02. சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, பருத்தித்துறை.

01. சோளங்கன் ச.ச.நிலையம்
02. மணியகாரன் தோட்டம் ச.ச.நிலையம்
03. விக்கினேஸ்வரா சி.நிலையம்
04. கட்பூது சி.நிலையம்
05. இராஜ கிராமம் ச.ச.நி., கரவெட்டி
06. சி.டி.எம்.ஏச்., கரவெட்டி
07. கவுந்தில் வாசிகசாலை, கிழவித்தோட்டம்
08. கோவிற்கடவை ச.ச.நிலையம்
09. கட்டைவேலி சி.நிலையம்
10. உடுப்பிட்டி வி.சி நிலையம்
11. உடுப்பிட்டி ச.ச நிலையம்
12. இலகடி ச.ச. நிலையம்
13. இமையாணன் மாதர் சங்கம்
14. கலைமகள் பாலர் பாடசாலை
15. இலந்தைக்காடு வாசிகசாலை
16. வதிரி சி.நிலையம்
17. அல்வாய் தெற்கு விசிசி நிலையம்
18. விநாயகர் பாலர் பாடசாலை
19. ஆதார வைத்தியசாலை
20. வல்லிபுரக் குறிச்சி
21. 4ஆம் குறுக்குத்தெரு, சிகிச்சா நிலையம்
22. சிடி பருத்தித்துறை
23. தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை ச.ச.நிலையம்
24. மாதனை மாதர் சங்கம்
25. கற்கோவளம் சி.நிலையம்
26. திக்கம் சி.நிலையம்
27. வியாபார மூலை சி. நிலையம்
28. அம்பிகை பாலர் பாடசாலை
29. வளர்மதி பாலர் பாடசாலை
30. கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை
31. கொற்றாவத்தை இ.த.க.பாடசாலை (பாலாவி)
32. வி.வி.ரி. வைத்தியசாலை
33. பாரதி ச.நிலையம்
34. ஆதிகோவிலடி வாசிகசாலை
35. அ.மி.த.க.பாடசாலை, வல்வெட்டித்துறை
36. கொற்றாவத்தை பாடசாலை
37. மணற்காடு பாலர் பாடசாலை
38. குடத்தனை மேற்கு சி.நிலையம்
39. குடத்தனை மேற்கு வாசிகசாலை
40. பொற்பதி வாசிகசாலை
41. குடத்தனை வடக்கு வாசகசாலை
42. அம்பன் அ.மி.த.க.பாடசாலை
43. மருதங்கேணி நடமாடும் வைத்தியசாலை
44. செம்பியன்பற்று சேச்
45. ஆழியவளை பாடசாலை
46. வெற்றிலைக்கேணி கிராம சேவகர் அலுவலகம்
47. உடுத்துறை கிராம சேவகர் அலுவலகம்
48. முல்லியான் சந்திக் கட்டடம்
49. வல்லிபுரக்கோயில்

### 03. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம்.

01. சுவாமியார் வீதி, சிகிச்சா நிலையம்
02. சிறுவர் பூங்கா சிறுவர் பாடசாலை, பாஷையூர்
03. திருநகர் சனசமூக நிலையம்
04. குருநகர் சிகிச்சா நிலையம்
05. ஆவே மரியா பாலர் பாடசாலை
06. யூபிலி மகப்பேற்று நிலையம்
07. யூபிலி மகப்பேற்று நிலையம்
08. ஆயுர்வேதக் கல்லூரி
09. போதனா வைத்தியசாலை
10. கொட்டடி பாலர் பாடசாலை
11. நாவலர் சிகிச்சா நிலையம்
12. நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை
13. சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனை (கண்டி றோட்)
14. அரியாலை மகப்பேற்று நிலையம்
15. ஞானக்குழந்தை பாலர் பாடசாலை (சிவப்பிரகாசம் றோட்)
16. அங்கர் பார்மசி முன் (ரவி வீடு)
17. கந்தர்மடம் சிகிச்சா நிலையம்
18. செட்டித்தெரு சனசமூக நிலையம்
19. நல்லூர் சிகிச்சா நிலையம்
20. மூத்த விநாயகர் சனசமூக நிலையம் (நல்லூர்)
21. வண்ணார்பண்ணை சிகிச்சா நிலையம்
22. ஞானக்குழந்தை பாலர் பாடசாலை (இராமநாதன் றோட்)

### 04. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்.

01. பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலை
02. சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம்
03. மாதகல் பிள்ளையார் கோயிலடி
04. இளவாலை மத்திய மருந்தகம்
05. சங்கானை சுற்றயற் கூறு (PU)
06. சு.வை.அ. பணிமனை, மானிப்பாய்
07. தொல்புரம் மத்திய மருந்தகம்
08. மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை
09. வட்டு.தெற்கு திருஞான சம்பந்தர் பாடசாலை
10. சங்கரத்தை மாதர் சங்கம்
11. ஆனைக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையம்
12. சண்டிலிப்பாய் (ஆலங்குலம் சனசமூக நிலையம்)
13. நவாலி வை.எம்.சி.ஏ.
14. வட்டு.மத்திய மருந்தகம்
15. பண்ணாகம் ஆரம்ப சுகாதார நிலையம்
16. சுழிபுரம் மாதர் சங்கம்
17. மானிப்பாய் லயன்ஸ் கழகம்
18. சுதுமலை குண்டடி வாசிகசாலை
19. சாவற்கட்டு ஆரம்ப சுகாதார நிலையம்
20. அராலி சரஸ்வதி வித்தியாசாலை
21. அராலி இந்துக் கல்லூரி
22. வட்டு.(R.H.) (கிராமிய வைத்தியசாலை)

### 05. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி.

01. C.D. மிருசுவில்
02. V.C. கச்சாய்
03. கெற்பேலி
04. கச்சாய் அம்மன்
05. விடத்தற்பளை
06. மீசாலை கிழக்கு
07. மீசாலை வடக்கு
08. கைதடி தச்சன்தோப்பு V.C.
09. கல்வயல்
10. சரசாலை
11. C.D. & M.S. வரணி
12. வரணி நாவற்காடு
13. D.H. சாவகச்சேரி
14. மந்துவில்
15. மட்டுவில் வளர்மதி
16. மட்டுவில் வடக்கு
17. கைதடி வடக்கு
18. C.D. கைதடி
19. முகமாலை

### 06. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்.

01. இடைக்காடு ஆர்.டி.எஸ்.
02. சு.கூ. அச்சுவேலி
03. சூசியப்பர் கோயிடி, அச்சுவேலி
04. ம.ம.புத்தூர்
05. ஆவரங்கால் மத்தி, வடக்கு
06. வீ.சி.புத்தூர்
07. பி.எச்.சி. வாகரவத்தை
08. ஆர்.டி.எஸ். சிறுப்பிட்டி
09. ஆர்.டி.எஸ். அச்செழு
10. ஆர்.டி.எஸ். நீர்வேலி
11. ஆர்.டி.எஸ். ஊரெழு
12. உரும்பிராய் ஆரம்பப் பாடசாலை
13. உரும்பிராய் சைவத்தமிழ்ப் பாடசாலை
14. சு.வை.அ.பணிமனை, கோப்பாய்
15. இருபாலை மாதா கோயிலடி
16. ஆர்.டி.எஸ். கட்டைப்பிராய்
17. கல்வியன்காடு சைவ.
18. திருநெல்வேலி கலாமன்றம்
19. திருநெல்வேலி சி.சி. காளிகோயிலடி
20. ம.ம.கொக்குவில்
21. ம.ம.ம.ம. கோண்டாவில்
22. சிகிச்சா நிலையம், கோண்டாவில்
23. ஆர்.டி.எஸ். கொக்குவில்
24. உரும்பிராய் கிழக்கு வாசிகசாலை

### 07. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஊர்காவற்றுறை.

01. காரைநகர் அரச வைத்தியசாலை
02. காரைநகர் வாரிவளவு பாலர் பாடசாலை
03. களபூமி கிராம சேவையாளர் அலுவலகம்
04. ஊர்காவற்றுறை அரச வைத்தியசாலை
05. தம்பாட்டி சனசமூக நிலையம்
06. நாரந்தனை ஆரம்ப சுகாதார நிலையம்
07. புளியங்கூடல் ஆரம்ப சுகாதார நிலையம்
08. மெலிஞ்சிமுனைப் பாடசாலை
09. அனலைதீவு அரச வைத்தியசாலை
10. எழுவைதீவு ஆரம்ப சுகாதார நிலையம்
11. அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்
12. மண்டைதீவு
13. வேலணை அரச வைத்தியசாலை
14. புங்குடுதீவு அரச வைத்தியசாலை
15. நயினாதீவு அரச வைத்தியசாலை
16. நெடுந்தீவு அரச வைத்தியசாலை
17. நெடுந்தீவு மேற்கு ச.ச.நிலையம்
18. நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம்

**மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,**
**சுகாதாரசேவைகள்,**
**யாழ்ப்பாணம்.**

(C/24458)

## வான் சாரதி உடன் தேவை

சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் உடன் கொழும்பில் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

**மிருணாளஸ் சுப்பர் மார்க்கற்**

340, அளுத்மாவத்தை றோட்,

கொழும்பு - 15.

தொலைபேசி 01-525147 (9933)


## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

2002.10.23ஆம் திகதி யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.செல்லத்துரை கனகசபாபதி அவர்களால் மாவட்ட கூட்டுறவு உத்தியோகத்தர் செல்லப்பா திருச்செல்வம் ஆகிய எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதி பிரிவு 18(1)இன் கீழ் வரைவுள்ள முள்ளி தச்சுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்தை பின்வரும் நிகழ்ச்சி நிரலுக்கமைய அழைக்கின்றேன். இக்கூட்டத்திற்கு சங்கத்தின் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். கூட்டம் எனது தலைமையில் நடைபெறம்.

இடம் : சங்க மண்டபம்
நாள் : 2002.10.28
நேரம் : பி.ப. 2.00 மணிக்கு

நிகழ்ச்சி நிரல்:
1. இறைவணக்கம்
2. தலைமையுரை
3. சங்கத்தின் புனரமைப்புப் பற்றி ஆராய்தல்
4. இயக்குநர் சபைத் தெரிவு
5. நன்றியுரை

(9923) - மாவட்ட கூட்டுறவு உத்தியோகத்தர்.


தமிழின் சிறப்பு யாழ்ப்பாணம்...
கற்றாளைச்சாற்றின் சிறப்பு
போரோசொப்ட் சோப்




முதன்முறை கேட்டு வாங்குங்கள்
மறுமுறை கேட்டு வாங்குவீர்கள்...


மிருதுவான, தூய்மையான, அழகிய சருமத்திற்கு கற்றாளைச்சாறு, கொகும்பட்டர், கிளிசரின் அடங்கிய வாசனை சோப்.

சகல விதமான சருமங்களுக்கும் ஏற்ப சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது.

எமது தயாரிப்புக்களை கீழ்வரும் பல்நோக்கு கூட்டுறவுச்சங்கக் கிளைகளிலும் மற்றும் அதன் பிராந்திய கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி, நீர்வேலி, அச்சுவேலி

JEGHAN PHARMACY
No.462/B, Hospital Road, Jaffna. Tel 021-2194, 3191


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 - 04 - 1942 | 29 - 10 - 1999 |

### அமரர் தம்பிமுத்து சோமசுந்தரம்

திதி 26.10.2002

எண்ணியிருந்த சிந்தனைகள் இமைக்க முன்
எண்ணாமல் சிதறிக் கலைந்து ஆண்டு மூன்றும்
ஆனதையா!
கண்ணின் ஒளியாகி உயிரிற் கலந்தவரே
மண்ணிலே வாழ்ந்த மகத்துவத்தை மறவோம்!

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி,
மருமகன் பிரசானந்தன்

*சங்குவேலி தெற்கு,*
*மானிப்பாய்.* (9931)


## செரண்டிப் எக்ஸ்பிரஸ் விமான சேவை

மேகங்களுக்குள்ளே சௌகரியமாகவும் வசதியாகவும்
ஒரு மணித்தியாலத்தில்
யாழ்ப்பாணம் - கொழும்பு
ஒரு வழிப்பயணத்துக்கு 2,425/=
இலகுவாக பயணச்சீட்டுக்களைப் பெறலாம்.



மூர்த்தி வீடியோ
யாழ்.வீதி, மானிப்பாய்.
T.P.: 021 - 2222884 (C/244474)


## பரீட்சை மண்டபம் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

வடக்கு - கிழக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தின் வெளிக்கள போதனாசிரியர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்காக இன்று நடைபெறவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்கான மண்டபங்கள் சில மாற்றப்பட்டுள்ளன.

வேம்படி மகளிர் உயர் கல்லூரி மண்டப இலக்கம் II யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பரீட்சை மண்டபம், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரி)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு பதிலளித்தார்.

கொழும்பில் அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் நேற்று அவர் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

அரசின் கொள்கைகளுக்கு கடந்த பொதுத் தேர்தலின் போது மக்கள் அங்கீகாரம் கொடுத்தனர். அவர்களின் கட்டளையை நிறைவேற்ற நாம் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே, எங்களுடைய அந்தக் கொள்கைகளை ஆதரிக்கும் எந்த ஒரு கட்சியும் எம்முடன் இணைந்து செயற்படலாம். அதற்கான கதவுகள் திறந்தே உள்ளன.

தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய தேசிய முன்னணி மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. யானை - புலி ஒப்பந்தம் ஒன்று பற்றிக் கூடப் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால், அவற்றை எல்லாம் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் தெளிவாக இருந்து சரியாகத் தீர்மானம் எடுத்தனர்.

- இவ்வாறு எமது கொள்கைகளை ஆதரித்து மக்கள் கொடுத்த ஆணையை நிறைவேற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு அரசுக்கு உள்ளது. - என்றார் ஜி.எல்.பீரிஸ்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது பற்றி ஜனாதிபதியின் அறிவிப்புக் குறித்தும் அவரிடம் கேட்கப்பட்டது.

அது தொடர்பாக அரசு எந்த ஒரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்று அவர் பதிலளித்தார்.

(ஐ)


**லக்ஷ்மி** இணுவில்
கமல்,சிம்ரன், ரம்யாகிருஸ்ணன், தேவயாணி, விஜயகுமார் நடித்த
**பஞ்சதந்திரம்** (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (9923)

**ராஜா** யாழ்ப்பாணம்.
விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
**யூத்** (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)
நாளை 27.10.02 ஞாயிறு மட்டும்
28முதல் இதயக்கனி (C-24275)

**நிரஞ்சனாஸ்** சங்கானை
சூர்யா, ஸ்ருதிகா, விஜயகுமார் நடித்த
**ஸ்ரீ** (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு மட்டும் இரவு 8.45மணிக்கு
KILLER BABE FOR THE C.I.A. (C-24276)

**நாகம்ஸ்** சுன்னாகம்
சரத்குமார், ரோஜா, மணிவண்ணன், வடிவேல் நடித்த
**சின்னத்துரை** (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (புதிய நேரம்) (9919)


## சேவை நலன் பாராட்டு விழா

கலாநிதி அ.சோமசுந்தரம்பிள்ளையின் சேவை நலன் பாராட்டு விழா இன்று பிற்பகல் 3மணிக்கு பருத்தித்துறை பசுபதீஸ்வரர் பார்வதவர்த்தினி கலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி ஆர்.உருத்திரா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் ஆசியுரையை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்திரூபானந்தா, சோமஸ்கந்த ராஜாக் குருக்கள், சிவஸ்ரீ க.சிவனேசக் குருக்கள், பங்குத்தந்தை பயஸ் இருதயதாஸ் அடிகளார் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சிறப்புரையை யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், முகாமைத்துவ வணிகத்துறை பீடாதிபதி மு.நடராஜசுந்தரம், பேராசிரியர் நாஞானகுமரன் தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி. எஸ்.சிவலிங்கராஜா ஆகியோரும் -

வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி அ.கனகரட்ணம், வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் எ.ஜெகநாதன், கலைஞர் வட்டச் செயலாளர் இரா.பஞ்சலிங்கம், வைத்திய கலாநிதி கதிரைவேற்பிள்ளை, இளைப்பாறிய ஆசிரியர் வி.கே.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் -

நிகழ்த்தவுள்ளனர்.(ஐ-ரி)


## கூறுவிலை கோரல்

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பாவனையில் உள்ள 17-8552 இலக்க மாருதி ஜீப் வாகனத்தின் எஞ்சின் திருத்த வேலைக்கான கூலிக்குரிய கூறுவிலை கோரப்படுகின்றது.

விரும்பும் கேள்விதாரர், மேற்படி பணிமனையில் வார நாள்களில் காரியாலய நேரத்தில் வாகனத்தைப் பார்வையிட்டு இவ்வேலைக்கான மதிப்பீட்டை 2002.11.11ஆம் திகதிக்கு முன்பு இரு பிரதிகளிற் தயாரித்து வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி, புலோலி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வே.தி.செல்வரத்தினம்
(C-24472) *வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி, புலோலி.*

## DRAGON MARTIAL ARTS SHOTOKAN

ஆதரவில் "வித்து" சஞ்சிகை நிறுவனம் இணைந்து நடத்தும்
**JAPAN KARATE - DO ITOSU - AKI - SRILANKA**
பயிற்சிப் பாசறை (Coaching Camp)
இடம் :- Y.M.H.A. திருநெல்வேலி
காலம் :-27.10.2002 ஞாயிறு காலை 9.00 மணிக்கு
*கராத்தே மாணவர்கள், ஆசிரியர்கள்*
*அனைவரும் கலந்து கொள்ளவும்.*

(9936) SENSAI .P.Rajan.


## கண்ணீர் அஞ்சலி

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன
பாதுகாப்பு ஊழியர் தி.அருளானந்தம் அவர்களின் அன்புத் தந்தையார்

### வைத்தியநாதர் தியாகராசா

அவர்கள் 24.10.2002இல் சிங்கப்பூரில் காலமாகியதையிட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம். திருகோணமலை, உவர்மலை, இல.210, லோவர் வீதியில் வதிகின்ற அன்னாரது குடும்ப உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- பாதுகாப்பு அதிபர், சார்ஜன்ட் மற்றும் ஊழியர்கள்.
*இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம். காங்கேசன்துறை.* (C-24470)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னையா பராசக்தி

சரவணை கிழக்கு, சோளாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பொன்னையா பராசக்தி அவர்கள் (24.10.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்புத் துணைவியாரும் சடாசிவம், கதிர்வேற்பிள்ளை, காலஞ்சென்றவர்களான புனிதம், சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, கமலாதேவி, அன்னலட்சுமி (ஜேர்மனி), விஜயலட்சுமி, ஜெகதீஸ்வரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சண்முகநாதன், மௌனசுந்தரம், குலநாயகம், குமார் (ஜேர்மனி), சிவபாதம், விஜயலட்சுமி(இந்தியா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.10.2002) சனிக்கிழமை புளியங்கூடலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.ஜெகதீஸ்வரன்
(மகன் - லண்டன்)

*புளியங்கூடல்,*
*ஊர்காவற்றுறை.* (9929)

### திருமதி செல்லம் சின்னம்மா

வாகையடி, மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம் சின்னம்மா நேற்று (25.10.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம் அவர்களின் அன்பு மனைவியும் பத்மநாதன், அற்புதநாதன்(பிரான்ஸ்), யோகநாதன்(கனடா), புஸ்பநாதன் (வீடமைப்பு அதிகார சபை உத்தியோகத்தர்), இரகுநாதன், கணேசநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அருமைத்தாயாரும் செல்வராணி, செல்வதேவி (பிரான்ஸ்), சந்திரவதனி (கனடா), செல்வமணி, இந்திராணி, பகீரதி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2002) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
புஸ்பநாதன் (மகன்)

*வாகையடி,*
*மட்டுவில்.* (9938)

### வசிகரன் வசந்தன்

பாலாவோடை, உடுவில் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வசிகரன் வசந்தன் நேற்று (25.10.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வசிகரன் - சகுந்தலாதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் வனஜன், சிந்துஜா, விதுஷன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்ராசா, இந்திராணி, காலஞ்சென்ற அருமைத்துரை மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2002) சனிக்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.வசிகரன்(தந்தை)
(விநாயகர் ஸ்ரோர்ஸ் - வசிகடை)

(9939)

# தரம் குறைந்த அரிசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- பல்வேறு மாதிரிகளை அமைச்சு அதிகாரிகள் நேரடியாகச் சேகரித்தனர். தரப் பரிசோதனைக்காக ஐ.சி. ஐக்கு (இலங்கை கைத்தொழில், விஞ் ஞான ஆய்வு நிறுவனத்துக்கு) அவை அனுப்பப்பட்டன. அது பற்றிய தரப்பரி சோதனை அறிக்கைகள் அமைச்சு வசம் உள்ளன.

அரிசியின் தரத்தில் வேறுபாடு, குறைகாண்ப்படுமாயின் அதற்கான பணம் கழிக்கப்பட்ட பின்னரே சம்பந்தப்பட்ட கொள்வனவுக்கான இறுதிக் கொடுப்பனவு, அமைச்சினால் வழங்கப் படும். இதுவே, வழமையான நடவடிக்கை இப்படி அந்த விளக்கக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் - இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்காகக் குடாநாட்டிற்கு எடுத்துவரப்பட்ட இந்த அரிசியின் மாதிரி, இன்று பிரதமர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனின் பணிப்பின் பேரில் தரம் குறைந்தது எனக் கூறப்படும் இந்த அரிசியின் மாதிரியை எடுத்துக் கொண்டு மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் இன்று கொழும்பு விரைகின்றார்.

கோமாரி கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு கோண்டாவிலில் உள்ள அரச களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் சுமார் 3 ஆயிரம் மெற்றிக் தொன் அரியில் பெரும் பகுதி தரங்குறைவாக இருப்பதாக கூறப்பட்டிருப்பது தெரிந்ததே

இந்த அரிசியின் 12 வகையான மாதிரிகளை எடுத்துக்கொண்டு மேலதிக அரச அதிபர் இன்று கொழும்பு செல்கின்றார். பிரதமர் அலுவலகத்தில் இந்த மாதிரிகளை அவர் கையளிப்பார். அரிசி தரங்குறைந்ததாகக் காணப்பட்டால் எக்காரணத்தைக் கொண்டும் அது நிவாரணத்திற்கு வழங்கப்படமாட்டாது என்றும் -

தரமான நல்ல அரிசியே பொது மக்களுக்கு வழங்கப்படும் என்றும் - அரச அதிபர் செ.பத்மநாதன் 'உதயனு'க்குத் தெரிவித்தார். (ஐ)

# அரசுத் தரப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனை நடத்தினர். இன்று சர்வதேச ரீதியாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நற்பெயரை நாம் வருமானமாக மாற்ற வேண்டும். அதற்கான சிறந்த வாய்ப்பாக நவம்பர் மாதம் ஆரம்பமாகும் உதவி வழங்கும் நாடுகளின் ஒஸ்லோ மாநாடு அமைகிறது. எனவே, அதற்கு முன்னர் கூட்டுச் செயலணி அமைக்கப்பட்டால் நாம் பாரிய அளவில் சர்வதேச நிதி உதவிகளைப் பெறலாம். இந்தக் கூட்டுச் செயலணி பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டுவிட்டது. இனி தாய்லாந்தில் இறுதித் தீர்மானம் தான் எடுக்கப்படவுள்ளது.

மேலும் மனிதநேய விடயங்களான கண்ணிவெடிகளை அகற்றுதல், மீள் குடியேற்றம் என்பன பற்றியும் யுத்த நிறுத்தத்தை மேலும் வலுப்படுத்துவது பற்றியும் பேசப்படும்.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்புத் தொடர்பாக அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. பிரச்சினைகள் தீவிரமடையுமுன்னர் அவை தீர்க்கப்படவேண்டும்.

அதனால், சிவில் சமூகத்தின் பங்களிப்புடன் சமாதானக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் அரசுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான நடவடிக்கைகளிலேயே ஈடுபடுகிறார்கள். மற்றைய விடயங்களை - சிவில் சமூகம் சார்ந்த விடயங்களைக் கையாள - இத்தகைய குழுக்கள் அவசியமாகின்றன.

புலிகள் இயக்கம் சார்பாக தாய்லாந்துப் பேச்சுக்களில் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும், கருணாவும் கலந்துகொள்வது கிழக்கு மாகாண பிரச்சினைகள் பற்றி பேச சாதகமாக அமையும்.

- இவ்வாறு அமைச்சர் கூறினார். (ஐ-12)


ஏ-சன் கல்வி நிலையம்

கணக்கீடு

A/L 2004

வங்கிக் கணக்கிணக்கக்கூற்று

திரு.பாலவாசன்

B.B.A.(F.M .Spl.)

Sat, Sun: 4.00 p.m

ஆரம்பம்: 27.10.2002 (Sun)

(9906)

விஷ்ணு கல்வி நிலையம்

தாவடி

A/L 2004

புதிய உதயம்

C.Maths: திரு.சு.மணிவண்ணன்

CHE.: திரு.வே.அன்பழகன்(கவ்வு)

General Chemistry

மீட்டலுடன்

Inorganic Chemistry

ஆரம்பமாகிவிட்டது. (9895)


## பரீட்சை நிலைய மாற்றம் தொடர்பான அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாண காணி நிர்வாக திணைக்களத்தின் வெளிக்கள போதனாசிரியர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 26.10.2002

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையங்கள் தொடர்பான ஏற்பாடுகளில் பின்வரும் 2 மண்டபங்கள் மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

1. வேம்படி மகளிர் உயர் கல்லூரி மண்டப இலக்கம் II மட்டும் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
2. யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரிப் பரீட்சை மண்டபம் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஏனைய மண்டப ஏற்பாடுகளில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

வே.பொ.பாலசிங்கம்,
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை.

(C-24473)

## கலந்துரையாடல்

செம்பியன்பற்று,ஒக்.26

வடமராட்சி தெற்கு மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் கலந்துரையாடல் ஒன்று நாளை பிற்பகல் 2மணிக்கு கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (எ-36)

# 15 நாள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணித்த இயந்திரப் படகு மிகப் பெரியதாக இருந்ததால் அதைத் தங்களால் மீட்டுவர முடியவில்லை என்றும் - அதிலிருந்த மீனவர்களை மட்டுமே காப்பாற்ற முடிந்ததாகவும் - திருமலை மீனவர்கள் தெரிவித்தனர்.

வழியின்றி தவித்த தங்களுக்கு உணவு, உடைகள் தந்து நன்கு ஆதரித்துக் காப்பாற்றிய மீனவர்களுக்கு தமிழ் நாட்டு மீனவர்கள் நன்றி தெரிவித்தனர்.

காப்பாற்றப்பட்ட ஆறு மீனவர்களது பெயர் விவரம் வருமாறு:-

கே.வேலாயுதம் (வயது 45), ஆர்.நாகலிங்கம் (வயது 31), ஆர்.இராஜேந்திரன் (வயது 34), எஸ்.இராமசாமி (வயது 40), எம்.இராஜேந்திரன் (வயது 38) சி.மணிமாறன் (வயது 33).

இவர்கள் நேற்று திருகோணமலை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவிருந்தனர். (ஐ)

## சமரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ஜெயசிகுறு' சண்டையின் போது எதிர்எதிர் தரப்புகளில் முக்கிய பங்காற்றியவர்கள் என்று செய்தி ஏஜென்ஸிகள் சுட்டிக்காட்டின.

'ஜெயசிகுறு' படை நடவடிக்கை ஆரம்பித்த நாள்களில் படையினரை முன்னேறவிட்டு புலிகள் நடத்திய ஒரு எதிர்ச் சமரின்போது மேஜர் ஜெனரல் கொட்டகொட மயிரிழையில் உயிர் பிழைத்தார். அவரைப் பாதுகாத்து மீட்பதற்காக ஒரு டசினுக்கும் அதிக படையினர் தங்கள் உயிர்களை இழக்க நேர்ந்தது. (ஐ-12)

## வரவு - செலவுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாதுரியமான வழிமுறைகளை ஆராய்கிறோம்.

*கேள்வி:* பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படுமா?

*பதில்:* அதற்கான தேவை இப்போதைக்கு இல்லை. ஆனால் அந்தத் தேவை ஏற்பட்டால் தேர்தல் நடத்த நேரிடலாம்.

*கேள்வி:* இம்முறை சமாதானப் பேச்சுக்களுக்குச் செல்லும் உறுப்பினர்கள் கட்டுநாயக்கா வழியாகச் செல்வார்களா?

*பதில்:* ஆம், அவர்கள் இலங்கையின் ஊடாகத்தான் செல்வார்கள். (ஐ-12)

## காணவில்லை

NP GH-0176 என்னும் இலக்கம் கொண்ட (YCLS) நீல நிற நியூஸ் மேற் (ஜமகா) மோட்டார் சைக்கிள் நேற்று (25.10.2002) வெள்ளிக்கிழமை இரவு 11மணிமுதல் காணவில்லை. கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

K.விநோதன்,
*லோட்டன் றோட்,*
*மானிப்பாய்.*

(C/24475) T.P.222 3401


GIBMS

ஆரம்பம்

இரு நிறுவனங்களில்

Jaffna & Chavakachcheri

DBA

Ms Office + SLCDL

26-10-2002

Sat-Sun

3:00-5:00 PM

7 DLIKIKS Road, Jaffna

Kandy Road, Chavakachcheri.

ACTOS


# திருமலை மூலைமுடுக்குகள் காதலர்களால் வழிகின்றன

திருகோணமலை நகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் மூலை முடுக்குகள், சன நெருக்கடியற்ற வீதிகள் காதலர்கள் கூடிச் சல்லாபிக்கும் இடங்களாக மாறிவருகின்றன.

இவர்கள் பெரும்பாலும் அதிகாலை 5.00மணிக்குப் பிறகும் பகல் 12 மணி முதல் 2.00மணி வரையிலும் மாலை 7.00மணிக்குப் பிறகும் சன நடமாட்டம் குறைந்த நேரங்களில் கூடிக் குலாவுகின்றனர்.

கணனி வகுப்புகள், ரியூசன்கள், பிரத்தியேக வகுப்புகள் என்று பெற்றோரின் காதுகளில் பூச்சுற்றி விட்டு, காதல் வேட்டைக்குப் புறப்படுகின்றனர் இவர்கள். பெரும்பாலும் மாணவ பருவத்தினர், பரீட்சை எழுதியவர்கள் என்று 18 - 25 வயதுக்குட்பட்டவர்களே சல்லாபத்தில் ஈடுபடுகின்றனர்.

திருகோணமலை சேமக்காலை வீதி, புனித அந்தோனியார் ஒழுங்கை, லவண்ட ஒழுங்கை, ஜோர்ஜ் வீதி, லவ் லேன், உப்புவெளி வீதிகள் என இவர்கள் கூடும் வீதிகளின் பட்டியல் நீள்கின்றன.

இவைகளைக் கருத்தில் கொண்டு பெற்றோர்கள் செயற்படுவார்களேயானால் வீண் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என அப்பகுதி ஓட்டோச் சாரதிகள் தெரிவிக்கின்றனர். (ஐ)

## தெற்கில் நேற்று 2மணிநேரம் மின்வெட்டு

கொழும்பு,ஒக்.26

நேற்றுக்காலை நாடு முழுவதிலும் சுமார் 2மணிநேரமாக மின்சார விநியோகம் தடைப்பட்டிருந்தது. காலை 9.10 மணியளவில் தடைப்பட்ட மின்சார விநியோகம், இரண்டு மணிநேரத்தின் பின்னர் ஒரு சில பகுதிகளுக்கு மீண்டும் வழங்கப்பட்டது.

தொழில்நுட்பக் கோளாறே மின்சாரத்தடைக்கான காரணம் என்று மின்சார சபையினால் கூறப்பட்டது. (ஐ)


மகாலட்சுமி உல்லாச பேருந்து சேவை

- இலங்கைத்தீவில் பரந்துள்ள அதிசயங்கள், கலைப்பொக்கிஷங்கள், கண்கவர் காட்சிகள், நீர்வீழ்ச்சிகள் இவற்றைப் பார்த்து இன்புற்று -



- உங்கள் விடுமுறை காலத்தை மகிழ்ச்சியாகக் களிக்க விரும்புகிறீர்களா?
- உங்கள் இல்லங்களில் நடைபெறும் விழாக்களுக்கு பேருந்துச் சேவை அவசியமாகும் பொழுது யாழ்.நகரில் நீங்கள் நாடவேண்டியவர்கள்:

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்

212,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே.இல. 222 2024, 222 2025

குறைந்த கட்டணம்! நிறைந்த வசதி!
குளிரூட்டப்பட்ட சொகுசு ஆசனங்கள்!

(C-24417)


# மரண அறிவித்தல்கள்

## புனிதசீலன் சதீஸ்குமார்

பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட புனிதசீலன் சதீஸ்குமார் நேற்று (25.10.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் புனிதசீலன்(மணி) - லூசியா றோஸ்மலர்(தேவி) தம்பதிகளின் அருமை மகனும் சுவிற்றா, கிளிற்றல், சைற்றஸ், தர்சினி, சாளினி, டில்கஷினி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*பாங்ஷால் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P. *222 2846* (9937)

தகவல்:
S.A.லிங்கன் (மாமன்)

## திருமதி சிவசிதம்பரம் அன்னமுத்து

மூளாயைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசிதம்பரம் அன்னமுத்து நேற்று (25.10.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசிதம்பரத்தின் (ஓய்வு பெற்ற லிகிதர் P.W.D) அன்பு மனைவியும் சிவ்கலை (ஆசிரியை, பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), சிவகுமாரன் (ஆசிரிய ஆலோசகர், புத்தளம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினகோபால் (வட பிராந்திய போக்குவரத்துச் சபை, காரைநகர் சாலை), சுதாகினி (ஆசிரியை, தாஹிரா கல்லூரி, புத்தளம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அரவிந்தன், சுகிர்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2002) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவபவனம்,*
*நாளுவன்,*
*சுழிபுரம்.* (C

தகவல்:
சிவகுமாரன் (மகன்)
இரத்தினகோபால் (மருமகன்)


SERENDIB விமான சேவை

சிறந்த சேவையின் சின்னம் SERENDIB

கட்டணத்தை சிந்தியுங்கள்....!
இலவச பஸ் சேவை விமான நிலையம் வரை
இரத்மலானை - வெள்ளவத்தை வரை
யாழ்.நகர் - பலாலி வரை
3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பயணச்சீட்டு இலவசம்!

(C/24464)

SERENDIB - MANO
13,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0777 - 801038, 021 - 2222007, 0777-512643,

SERENDIB EXP
500, காலி வீதி, வெள்ளவத்தை
505612, 500626

மனோஜ்
67/A, WOLFENDALL STREET, COLOMBO - 13
074-612656, 01-390128, 0777-517019


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.10.2002இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.